ஸம்புடம் 2 . விரோதிக்ருத் பங்குனி ஸஞ்சிகை 2

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அகோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

ஸ்ரீ அகோபில மட சிஷ்ய சபையின் காரியதரிசியால்,

ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும்.

கலாரத்நாகரம் அச்சாபீஸ், சென்னை.

வருஷம் 1-க்கு கட்டணம் ரூ. 2-0-0.] [ஒரு ஸஞ்சிகையின் விலை அணா 3.

# THE VEDANTA DIPIKA.

## A MONTHLY TAMIL JOURNAL

OF

## HINDU RELIGION AND PHILOSOPHY.

Vol. 2 – No. 2.

*March 1912.*

*Editor.*—S. VASUDEVA CHARIAR, B.A., L.T.


---

விரோதிக்ருத்ஸூ பங்குனிமீ

## விஷய ஸூசிகை.


| | பக்கம். |
|---|---|
| 1. விஶிஷ்டாத்வைதம் | |
| பத்ராதிபர் ... ... ... ... | 45. |
| 2. லக்ஷ்மீ தத்வம் | |
| ஸ்ரீமாந் எம். திருவேங்கடாசாரியர் ... ... | 56. |
| 3. லக்ஷ்மணனுடைய நிஷ்டை | |
| ஸ்ரீமாந். எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் ... | 61. |
| 4. பிராட்டியின் அபபப்ரதாநம் | |
| ஓர் பௌராணிகர் ... ... ... ... | 67. |
| 5. கர்ம யோகம் | |
| ஸ்ரீமாந் சே. நரஸிஹ்மாசாரியர் ... ... | 72. |
| 6. கடிதங்கள் ... ... ... ... ... | 76. |
| 7. பிரிவுகளின் அறிக்கை ... ... ... ... | 82. |
| 8. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... | 84. |



*Copy-right reserved.*

ஸ்ரீ:.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] விரோதிக்ருத்ஸு பங்குனிமீ. [ஸஞ்சிகை 2.

## விஶிஷ்டாத்வைதம்.

### 7. திவ்ய மங்கள விக்ரஹத்தின் விபாகங்கள்.

"𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂" என்கிறபடி ஜ்ஞாநஸ்வரூபமாகவும் வேதாந்தவேத்யமாகவு மிருக்கிற பரமமான ஜ்யோதிஸ்ஸுக்குத் திவ்யமங்களவிக்ரஹயோக மொன்றுண்டு என்று இதுவரையிற் சொன்னதால் நிர்ணயிக்கப்பட்டது. இந்த விக்ரஹத்தைப் பற்றி நமது ஸித்தாந்தம் சொல்லும் சில அம்ஶங்களை விசாரிப்போம்.

இந்த விக்ரஹம், ஐந்து வகைப்படும். (1) நித்யமாயும் ஏகரூபமாயும் நித்யருக்கும் முக்தருக்கும் ஸேவ்யமாயு மிருப்பது - ஒரு ரூபம். இதை 'பரரூபம்' என்று சொல்வார்கள். (2) இந்தப் பரரூபமடியாகப் பூர்வ பூர்வத்திற்கு உத்தரோத்தரம் கார்யமாகக்கொண்டு பிறந்து க்ருத த்ரேதா யுகங்கள் தோறும் மாறிமாறி வரும் நிறங்களை யுடைத்தானவை - இரண்டாவது ரூபம். இவைகளை 'வ்யூஹங்கள்' என்று சொல்வார்கள். (3) இந்த விபூதிகளிலிருக்கும் ப்ராணிகளுக்கு ஸஜாதீயங்களாய், மீனுகவும் ஆமையாகவும் சிங்கமாகவும்

மநுஷ்யனாகவும் தோன்றும் ரூபங்கள் - மூன்றாவது. இதை 'விபவங்கள்' என்று சொல்வார்கள். (4) யோக கலையால் ஹ்ருதயாப்ஜ கோஶத்தை உத்காடநம் செய்த தந்யர்களான சில யோகிகளால் யதாருசி அநுபவிக்கப்படுமது - நான்காவது. இதை 'அந்தர்யாமி' என்று சொல்வார்கள். (5) ஸ்வயம் வ்யக்தமாயும் திவ்யமாயும் ஆர்ஷமாயு மிருக்கும் வைஷ்ணவஸ்தாநங்களில் ஸகல விதமான அபசாரங்களையும் ஸஹிக்கும் ஶீலனாய், அர்ச்சக பாரதந்த்ர்யத்துக்கு எல்லைநிலமாய், ஆஶ்ரயிக்கும் ஜநங்கள் எல்லாருக்கும் ப்ரமேயனாய் ப்ரதிமைகளில் ஆவிர்ப்பவித்து நிற்கும் ரூபம் - ஐந்தாவது. இதை 'அர்ச்சை' என்று சொல்வார்கள். இந்த மாதிரியான விபாகத்தை ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் காணலாம்:—

"𑌸 𑌏𑌵 𑌕𑌰𑌣𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌰𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌭𑌕𑍍𑌤𑌵𑌤𑍍𑌸𑌲𑌃 ।
𑌉𑌪𑌾𑌸𑌕𑌾𑌨𑍁𑌰𑍋𑌧𑍇𑌨 𑌭𑌜𑌤𑍇 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌪𑌂𑌚𑌕𑌂 ॥

𑌤𑌦𑌰𑍍𑌚𑌾 𑌵𑌿𑌭𑌵 𑌵𑍍𑌯𑍂𑌹 𑌸𑍂𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑌂 ।
𑌯𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯𑍈𑌵 𑌚𑌿𑌦𑍍𑌵𑌰𑍍𑌗𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌦𑌿𑌤𑍋𑌪𑌾𑌸𑍍𑌤𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌕𑍍𑌷𑍀𑌣𑌕𑌲𑍍𑌮𑌷𑌃 ।
𑌉𑌤𑍍𑌤𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌧𑌿𑌕𑍃𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥"

அதாவது - "கருணாநிதியாக இருக்கும் பகவாந் ஆஶ்ரித ஜநங்களினிடத்திலிருக்கும் வாத்ஸல்ய வஶத்தால் உபாஸகர்களுடைய யோக்யதைக்குத் தகுந்தபடி ஐந்து வித மூர்த்திகளை அடைகிறான். அவைகளுக்கு அர்ச்சை, விபவம், வ்யூஹம், ஸூக்ஷ்மம், அந்தர்யாமி என்று பெயர். இவைகளை ஆஶ்ரயித்தே ஸகல ஜீவன்களும் அபிவ்ருத்தியை அடைகின்றன. பூர்வம் பூர்வம் சொல்லியிருக்கும் மூர்த்திகளை உபாஸ்தி செய்து, அந்த உபாஸ்தியாற் போக்கடிக்கப்பட்ட பாபங்களை யுடையவர்களாய் உத்தரம் உத்தரம் சொல்லப்பட்டிருக்கும் மூர்த்திகளை உபாஸிப்பதில் ஜீவகோடிகள் அதிகாரமுள்ளவர்களாக ஆகிறார்கள்." இவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கும் க்ரமத்தைப்பற்றிப் பிந்தி விசாரிப்போம்.

முதலில் பாரூபத்தைப்பற்றி நமது ஸித்தாந்தம் சொல்வதாவது:—அது ஸர்வோத்க்ருஷ்டமாயும் அபரிச்சிந்நங்களான குணங்களையுடையதாயும் இருத்தலால் நம்முடைய ஜ்ஞாநத்துக்கு எட்டாததாகவு மிருக்கும்: இந்தக் காரணத்தாலேயே அதற்கு 'பரம்' என்று பெயர்; ஊனக் கண்களாலும் இந்த வாக்காலும் அதை க்ரஹிப்பது துஸ்ஸாத்யம்; அதன் ஸ்வரூபமும் குணங்களும் அவாங்மநஸ கோசரங்கள் என்பதுதான். "ந வக்தும் ந ஶ்ரோதும் ந மநிதும் இயத்தோவா விஶிஷ்டம் நவ த்ரஷ்டும் வர்ண்யா தத்ர நவஹோக்தும் ஹி ஸமர்த்தம் - வரம் யத் ஸூக்தம்" என்று ஸ்ரீ ஆழ்வான் அருளிச்செய்திருக்கிறார். உபதேஶம், மநநம், நிதித்யாஸநம், ஸாக்ஷாத்காரம், அநுபவம் ஆகிற இந்த ஆறுவித அநுபவத்திற்கும் அதுவிஷயத்தில் நமக்கு ஶக்தியில்லை. கேவலம் தன்னாலே மாத்திரம் அறியக்கூடியதாயும், தன் ஒருவனுக்கே நிலைக்குமதுவாகவும் உள்ள ஆநந்த பரிதமாகிய ஒரு தஶையில் இந்த ரூபம் நின்றுகொண்டிருக்கிறது. வயிற்றுத் தாரிகள் உதாரணைப்பெற்றுப்போலே, ஜ்ஞாநம் முதலிய குணங்கள் எல்லாம் இந்தப் பா ரூபத்தை அடைந்து நிறம்பெற்றுவருகின்றனவாம். ஸ்வாநுபவரூபமாகிற ஒரு தஶையை உடையதாய்க் கொண்டு அபரிச்சிந்ந ஆநந்தத்தாலே நிரம்பி அலையடங்கிநிற்கும் ஸமுத்ரம்போலிருக்கிற ஸ்வரூபத்தை உடையதாம் இது: "யஸோ ஶ்ரீதேவ்யா ஹ்ருதய இவதே ஸத்குணகணாः ப்ரயத்நே ஹோऽநத்த ஸ்வஶவநஶாந்தோர்மிதஶஃ - க்வசேவ க்வாபி வ்யுத்திதவிதரங்கம் பரத ஹோ ஸ்வஸம்வேத்ய ஸ்வாத்மயஸ பஹுஸாநந்த ஹஸிதம்" என்று ஸ்ரீ பட்டருடைய ஸ்ரீ ஸூக்தி. அதாவது - எம்பெருமானுக்கு நித்யோதித தஶையென்றும், ஶாந்தோதித தஶையென்றும் இரண்டு தஶை உண்டு. இதில் ஒன்று பரத்வத்தில், ஒன்று வ்யூஹ வாஸுதேவனிடத்தில் என்று விபாகமிருந்தாலும், இரண்டிலும் இரண்டு வ்யவஹாரமும் உண்டு என்று ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். அளவற்ற கல்யாணகுணகணங்களைத் தானே அநுபவித்துக்கொண்டு நிஸ்தரங்கார்ணவம்

போல நிற்பது ஒருதசை; மற்றொன்று தன்னுடைய விபூதியின் அநுபவத்தால் ஏற்படும் ஆகையினால்தான், ஆசார்யர்கள் பகவானுடைய பரத்வத்தையும், ஆதிவ்யூஹஸ்வரூபத்தையும் விவரிக்கும் இடங்களில் எல்லாம் அவனுடைய ஶாந்தோதித தசையையும் நித்யோதித தசையையும் பற்றிப் பேசுவது வழக்கம். அப்படிப்பட்ட நித்யோதித ஶாந்தோதித தசையில் நிற்கிறது இந்தப் பாரூபமென்று தாத்பர்யம்.

இவனுடைய ஆநந்தத்தைச் சொல்ல ஆரம்பித்த ஆநந்த வல்லி யென்னும் ஶ்ருதி, மநுஷ்யன் துடங்கி ப்ரஹ்மாவளவும், அவனுக்கு மேலும் "யதோவா சோ" இத்யாதியாக உத்ப்ரேக்ஷித்து, 'எவ்விதமான பரிச்சேதத்தை இதற்குச் சொல்லலாம்?' என்று விசாரிக்க இழிந்து, தான் எவ்விதமான குணபரிச்சேதத்தை உத்தேஶித்ததோ அந்த அளவின் ஜ்ஞாநத்தை அடையாமலே வழியிலேயே இடறி மூகனைப்போல வாய்திறவாததாய்த்து. அவ்வளவு அபரிச்சிந்நங்களன்றோ இவனுடைய குணங்கள்? "ஊர்த்வம் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]" என்று ஸ்ரீபட்டர் ஆஶ்சர்யப்பட்டிருக்கிறார். "குழுமித் தேவர்குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே" என்றும், "ஆதியஞ்சோதியுரு" என்றுஞ் சொல்லுகிறபடியே வானுயரின்பம் மன்னி வீற்றிருக்கும் ரூபமன்றோ இது?

'இப்படியே அவாங்மநஸ கோசரமாக நின்றுவிட்டால், ஏதோ சில தந்யர்கள் மாத்திரம் கரையேறுவதற்கு உபயுக்தமாகிவிடும் நம்முடைய ரூபம்' என்று எண்ணி, ஆஶ்ரித வத்ஸலனான பகவாந், வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபங்களாகத் தன்னை வ்யூஹித்து ஆஶ்ரயிக்கும் ஜநங்களது திறமைக்கு அநு

குணமாகத் தனது குணங்களை ஆவிர்ப்பாவஞ்செய்துகொண்டு ஜகத்தை ஸம்ரக்ஷித்து வருகிறான். இந்த நாலு ரூபங்களுக்குத் தான், வ்யூஹங்கள் என்று பெயர். இப்படி வ்யூஹித்து நிற்பதற்குத் தனது ஸங்கல்பமே ஹேது ; தன்னை ஆஸ்ரயிக்கும் ஜநங்களுக்குத் தான் ஆஸ்ரயணீயனாகவேணுமென்பதே கருத்து. "𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌿𑌤 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑍀𑌯𑌤𑍍𑌵𑌾𑌯 𑌸𑍍𑌵𑍇𑌚𑍍𑌛𑌯𑌾 𑌚𑌤𑍁𑌰𑍍𑌧𑌾𑌽𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇" [ஸ்ரீ பாஷ்யம் 2-2-41] என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிறார். இதற்கு மூல ப்ரமாணம், பரமஸம்ஹிதையில் இருக்கும் "𑌪𑌰𑌮𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌾𑌦𑍍𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌤𑍍𑌸𑌂𑌕𑌰𑍍𑌷𑌣𑍋 𑌨𑌾𑌮 𑌜𑍀𑌵𑍋 𑌜𑌾𑌯𑌤𑍇; 𑌸𑌂𑌕𑌰𑍍𑌷𑌣𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑌸𑌂𑌜𑍍𑌞𑌂 𑌮𑌨𑍋 𑌜𑌾𑌯𑌤𑍇; 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌸𑌂𑌜𑍍𑌞𑍋𑌽𑌹𑌂𑌕𑌾𑌰𑍋 𑌜𑌾𑌯𑌤𑍇" என்னும் வாக்யம்தான். இந்த வாக்யத்தின் அர்த்தத்தைப் பார்த்தால், பரப்ரஹ்மத்தினிடத்திலிருந்து ஸங்கர்ஷணனென்னும் ஜீவன் உண்டாகிறானென்றும், அந்த ஸங்கர்ஷணனிடமிருந்து ப்ரத்யும்நனென்னும் மநஸ் உண்டாகிறதென்றும், அந்த ப்ரத்யும்நனிடமிருந்து அநிருத்தனென்னும் அஹங்காரம் உண்டாகிறது என்றும் ஆபாததஃ ஏற்படும். இது அஸங்கதமான அர்த்தமென்றும், ஜீவன் அநாதி யென்று சொல்லும் ஸ்ருதிக்கும் பரப்ரஹ்மத்தினிடத்திலிருந்தே மநஸ்ஸின் உத்பத்தியைச் சொல்லும் ஸ்ருதிக்கும் இது விருத்தமாகையால் இந்த வாக்யம் அந்த அர்த்தத்தைக் கொண்டது அல்லவென்றும், இவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கும் உத்பத்திக்கு ஸ்வேச்சையாகப் பகவான் ரூபம் எடுத்துக் கொள்வது தாத்பர்யமென்றும் ஸ்ரீ பாஷ்யகாரர் அநேக ஹேதுக்களைக்கொண்டு நிர்வஹித்திருக்கிறார். ஆஸ்ரித வாத்ஸல்ய நிமித்தமாக ஸ்வேச்சையாகவே பகவாந் ரூபங்களை எடுத்துக் கொள்வதை "𑌅𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍋 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌜𑌾𑌯𑌤𑍇" என்கிற வாக்யத்தில் ஸ்ருதி ஒப்புக்கொண்டேயிருக்கிறது. ஜீவன் மநஸ் அஹங்காரம் ஆகிற இந்தத் தத்வங்களுக்கு ஸங்கர்ஷணன் ப்ரத்யும்நன் அநிருத்தன் ஆகிற இந்த ரூபங்கள் அதிஷ்டாதாக்களாகிற

படியால், ஜீவன் முதலிய ஶப்தங்களால் ஸங்கர்ஷணன் முதலிய வர்களை ஶ்ருதி சொல்வது விருத்தமன்று.

'இப்படி வ்யூஹித்து நிற்கும் பகவாந், எவ்விதத்தில் பரத்வத்தைக் காட்டிலும் விஶேஷித்த ஆஶ்ரயணீயனாகிறான்' என்று கேட்டால், 'அவனுடைய குணங்களின் ஆவிர்ப்பாவம், மறைத்தல் ஆகிற இவைகளின் விபாகத்தால்' என்று ப்ரத்யுத்தரம் ஏற்படுகிறது. அதாவது - தன்னுடைய பரத்வத்தை விட்டு ஸௌலப்யத்தை முன்னிட்டு வ்யூஹிக்கிறபடியால், நமக்கு ஆஶ்ரயணீயனாகிறான் என்கிறபடி. அபரிச்சிந்ந குணகனாயிருக்கிறபடியாலன்றோ பரதஶையில் அவன் நமக்கு ஆஶ்ரயணீயனாகவில்லை; இங்கு அப்படியன்று. பரதஶையில், எம்பெருமானுக்கு உத்க்ருஷ்டமான ஜ்ஞாநமும், ஒப்பற்ற பலமும், குறைவற்ற ஐஶ்வர்யமும், அளவில்லாத வீர்யமும், ப்ரக்ருஷ்டையான ஶக்தியும், உத்க்ருஷ்டமான தேஜஸ்ஸும், இவைகளின் ஶாகாபேதங்களாகிற தயை க்ஷமை முதலியவைகளும் எல்லாம் பூர்ணமாக ஆவிர்ப்பவித்து நிற்கின்றன. வ்யூஹதஶையிலோ, வாஸுதேவனென்னும் ஆதி வ்யூஹரூபம் பரத்வத்தோடு ஒத்து இந்த ஆறு குணங்களால் நிறைந்ததாயும் நித்யர்கள் முக்தர்கள் இவர்களால் மாத்திரம் அநுபவிக்கத் தகுந்ததாயுமிருந்த போதிலும், ஸங்கர்ஷணனென்னும் இரண்டாவது ரூபம் ஜ்ஞாநம் பலம் ஆகிற இந்த இரண்டு குணங்களை மேற்கொண்டு ஶாஸ்த்ர ப்ரதாநம் ஸம்ஹாரம் இவைகளைச் செய்துகொண்டிருக்கிறதென்றும், ப்ரத்யும்நனென்னும் மூன்றாவது ரூபம் ஐஶ்வர்ய வீர்யங்களோடுகூடித் தர்ம ப்ரவர்த்தநத்தையும் ஸ்ருஷ்டியையுஞ் செய்துகொண்டிருக்கிறதென்றும், அநிருத்தனென்னும் நான்காவது ரூபம் ஶக்தி தேஜஸ்ஸுக்களோடு கூடி மோக்ஷ ஹேதுவான ஸத்வ ப்ரவர்த்தநத்தையும் ரக்ஷணத்தையுஞ் செய்துகொண்டிருக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆஶ்ரயிக்கிறவனுடைய ஜ்ஞாந தாரதம்யத்துக்கு அநுகுணமாகக் குணங்களின் ஆவிர்ப்பாவம்செய்யப்படுகிறது என்று தாத்பர்யம். "ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி ஸபவாந் முக்தபோக்யோ பலாட்யாத் போதாத்

[illegible] ராஜ" என்கிற ஸ்ரீபட்டருடைய ஸ்லோகம் இந்த அபிப்ராயத்தையே வெளியிடுகிறது. ஆனுல், இப்படிப்பட்ட வ்யவஸ்தை சொல்லியிருப்பதால், குறிக்கப்பட்ட இரண்டு குணங்களைத் தவிர மற்றைக் குணங்கள் அவ்விடத்திலில்லையென்று அர்த்தமன்று. உபாஸகர்களின் ஸௌகர்யத்துக்காக அந்தந்த மூர்த்தியில் இரண்டு இரண்டு குணங்களை ஆவிஷ்கரிக்க வேணுமென்று பகவாந் ஸங்கல்பித்ததாக மாத்திரம் தாத்பர்யம். வஸ்து ஸ்திதியில் பகவாந் எல்லாமூர்த்திகளிலும் பூர்ணமான கல்யாண குணங்களோடு கூடியே இருக்கிருன். "[illegible]" என்று இந்த அர்த்தத்தையே ஆழ்வான் வெளியிட்டிருக்கிருர். வாஸுதேவன் முதலான இந்த நாலு வ்யூஹங்களிலும் ஒவ்வொரு வ்யூஹத்திலே மும்மூன்ருகப் பிரிந்து கேஶவன் முதலிய திருநாமங்களையுடைய ரூபங்கள் பன்னிரண்டையும் எம்பெருமான் வ்யூஹாந்தரங்களாகக் கொள்ளுகிருன் என்பது, ஸம்ப்ரதாய ரஹஸ்யம்.

இப்படி சேதநர்களுடைய துக்கத்தை ஸஹிக்காமல் எவ்வளவோ விதமான ஹிதத்தை அடுத்தடுத்துச் செய்தும், சேதநர் அதன்வழியே போகாமல் ஶாஸ்த்ர நிஷித்தங்களாகவும் தங்களுக்கு அஹிதங்களாகவுமிருக்கும் தீயசெயல்களைச் செய்து கஷ்டப்பட்டுக்கொண்டு நிற்க, அவர்கள் நல்வழிவருவார்களோ வென்கிற ஒரு துராசையாலே, தன்னுடைய ஸ்தநந்தய ப்ரஜை ரோக பீடிதையானுல் தான் ஔஷதமுண்ணும் மாதாவைப் போலப் பகவாந் தேவ மநுஷ்யர் முதலான யோநிகளில் அவதாரஞ்செய்து அந்தந்த வர்ணாஶ்ரம விதிகளுக்கு உட்பட்டு க்லேஶத்தைப் பாராட்டாமலே நடந்துவருகிருன். இந்த அவதாரங்களைத்தான், விபவங்கள் என்கிறது. தான் கர்மத்தால் பிறவா

தவனும், மரணமின்றிக்கே இருந்து கொண்டு "ஜநிவாஜநீதி" என்கிறபடியே விளங்காநிற்கச் செய்தேயும், தேவ மநுஷ்ய திர்யக்குக்களுக்கு ஸமாநமான தர்மத்தை யுடையவனாய் அவதரிப்பது, அவனது பரமஸௌலப்யத்தைக் காட்டுகிறது. இப்படிச் செய்த அவதாரங்கள் மத்ஸ்யம் முதலான பத்து அவதாரங்களென்றும், இன்னும் சில க்ரமப்படி முப்பத்திரண்டென்றும், அவைதன்னிலே தோன்றும் சில ரூபங்கள் விபவாந்தரங்களென்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த விபவாவதாரத்தின் யாதாத்ம்யத்தைப்பற்றி ஸ்ரீபாஷ்யகாரர் பின் வருமாறு நிர்ணயம் செய்திருக்கிறார் :—ஸகல கல்யாண குணங்களுடன் கூடியும் ஹேயகுணங்களில்லாமலு மிருக்கும் பகவாந் ஜந்மம் எடுப்பது இந்த்ரஜாலம்போலப் பொய்யன்று; ஸர்வ விதத்திலும் ஸத்யம். அப்படி ஜநிக்கும் பகவானுக்கு நமக்குப் போல ஜ்ஞாந ஸங்கோசாதிகள் கிடையாது; ஆனால், தனக்கு இயற்கையாக இருக்கும் பரமேச்வர ஸ்வபாவத்தை விடாமலே அவதரிக்கிறான். அவனுடைய சரீரம் நம்முடையதுபோல ஸத்வ ரஜஸ் தமஸ் சேர்ந்த ப்ரக்ருதியால் உண்டானது அன்று; ஆனால், அப்ராக்ருத சுத்த ஸத்வத்தால் ஏற்பட்டதே. அவனுடைய ஜந்மத்திற்கு அவனுடைய ஸங்கல்பம் காரணமே தவிர, புண்ய பாப ரூபமான கர்மங்கள் காரணமல்ல. தர்மம் குறைந்து அதர்மம் மேலிடுங் காலமே, அவன் அவதரிக்குங் காலம். ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பதும், துஷ்ட கார்யம் செய்பவர்களை சிக்ஷிப்பதும், தர்மத்தை நிலைநிறுத்துவதுமே அவனது ஜந்மத்தின் பலங்கள். ஆகையால், ஸ்வரூபத்தாலும், ப்ரகாரத்தாலும், த்ரவ்யத்தாலும், காரணத்தாலும், காலத்தாலும், ப்ரயோஜநத்தாலும் அவனது ஜந்மம் திவ்யமென்பது ஸித்தம்.

இந்த அர்த்தத்தை ஸ்ரீ கீதையில் 4.-வது அத்யாயத்தில் அவதார ப்ரகரணத்தில் ஸ்ரீ பகவானே மூன்று ச்லோகத்தால் விளக்கியிருக்கிறார். "அஜோऽபி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீச்வரோऽபி ஸந் - ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்ம

மாயயா ॥ யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத । அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததாऽऽத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥ பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் । தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥" இந்த விபவாவதாரங்களில் இந்த மாதிரியான புத்தியைச் செய்து ஒருவன் உபாஸித்தால் அவனுக்கு அந்த ஜந்மத்திலேயே பகவத் ப்ராப்தி உண்டு என்பதை, "ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத: । த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுந" என்கிற ஶ்லோகத்தில் காணலாம்.

இந்த மாதிரியாகவே ஜீவன்களிடத்தில் தனக்கு இருக்கும் அளவற்ற வாத்ஸல்யத்தை முன்னிட்டுக்கொண்டு ஒவ்வொரு ஶரீரத்தினுள்ளும் ஹ்ருதயத்தில் ஒரு ஸூக்ஷ்மரூபத்துடன் பகவாந் ஆவிர்ப்பவித்திருக்கிறான். இந்த ரூபத்தைத்தான், அந்தர்யாமி ரூபமென்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு ஆவிர்ப்பாவமொன்றுண்டு என்பதற்கு ப்ரமாணம் - "ய ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஶ:... தஸ்மிந் ஶேதே", "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:", "ஈஶ்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி" முதலான ஶ்ருதி ஸ்ம்ருதி வாக்யங்கள்தான் - இதன் உபாஸந ப்ரகாரம் முதலியவை, "பத்மகோஶ ப்ரதீகாஶம்" என்று ஆரம்பித்து "தஸ்யா: ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:" என்கிற வாக்யமளவும் நாராயணாநுவாகத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மஹாயோகிகள் இந்த ரூபத்தை அறிய ஶக்தர்கள்.

இந்த ரூபத்துக்குக் கேவலம் வாத்ஸல்யமே மூலம் என்பதை, ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகன் ஒருவாறு வெளியிட்டிருக்கிறார். "ஔதந்வதே மஹதி ஸத்மநி பாஸமாநே ஶ்லாக்யே ச திவ்யஸத

𑌨𑍇𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌸𑌵𑌃 𑌪𑌰𑌮𑌹𑍃𑌦𑍍𑌯 - 𑌕𑌣𑌃 𑌕𑌥𑌮𑍈𑌵𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌪𑌂 𑌸𑌾 𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌂 𑌜𑌾𑌤𑌂 𑌕𑌿𑌮𑍀𑌶 𑌕𑌥𑌮𑌧𑌿𑌶𑌰𑌣𑌾𑌸𑍍𑌪𑌦𑌂𑌤𑍇”, “ஹே கரி கிரி நாத! க்ஷீரார்ணவ மத்யத்தில் அதி விஸ்தாரமாகவும் எல்லாராலும் பூஜிக்கத்தகுந்ததாகவும், ப்ராக்ருதி மண்டலத்தைக் காட்டிலும் வெளிப்பட்டிருக்கும் ப்ரதேஶத்தில் ஶ்ருதிகளால் ஶ்லாகிக்கப்பட்டு அளவற்ற காந்தியுடனும் உமக்கு நித்யமான ஒரு திவ்ய ஸ்தாநம் இருக்கையில், இந்த ஶரீரத்தின் நடுவில் அதி பரிமிதமாக இருக்கும் இந்தக் குஹை எப்படி உமக்கு ப்ரீதி பாத்ரமாகிறது?” அதாவது - அப்படி ப்ரீதிசெய்ய பகவானுடைய வாத்ஸல்யமே ஹேது; அவனை ஆகர்ஷிக்கக்கூடிய குணமொன்றும் இந்த ஸ்தாநத்தில் இல்லையென்று தாத்பர்யம்.

இவ்வளவு வாத்ஸல்யத்துக்கும் அகப்படாமல் இன்னும் ஸம்ஸாரத்திலேயே உழலும் சேதநர்களைப் பார்த்து, ஸ்ரீபகவாந், சேதநர்களுடைய அபராதங்கள் எல்லாவற்றையும் பொறுக்கும் ஶீலமுள்ளவனும் அர்ச்சக பாரதந்த்ர்யத்துக்கு எல்லை நிலமாயும் இந்தப் பூமியிலுள்ள சில ஸ்தாநங்களில் ப்ரதிமாரூபமாக ஆவிர்ப்பவித்துச் சேதநோஜ்ஜீவநம் செய்துகொண்டு வருகிறான். இந்த ரூபத்தைத்தான், ‘அர்ச்சை’ என்று வ்யவஹரிக்கிறார்கள். “தமருகந்ததெவ்வுருவ மவ்வுருவம்தானே தமருகந்த தெப்பேர் மற்றப் பேர்”, “நெஞ்சினால் நினைப்பா னெவ னவனாகு நீள்கடல் வண்ணன்” என்னும்படி யன்றோ இருக்கிறது இந்த ரூபம்? ஸ்ரீ பகவத் கீதையிலும் “𑌯𑍇 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌭𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 - 𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃” என்று ஸ்ரீ பகவானே அருளிச்செய்திருக்கிறான். “என்னை ஆஶ்ரயிக்க வேணுமென்கிற எண்ணமுள்ள ஜநங்கள், தங்கள் தங்கள் அபேக்ஷைக்கு அநுரூபமாக எந்த எந்த ப்ரகாரமாக என்னை ஏற்படுத்தி ஆஶ்ரயிக்கிறார்களோ, அந்த அந்த

இஷ்ட ப்ரகாரம் அவரவர்களுக்கு நான் என்னைக் காண்பித்துக்கொள்ளுகிறேன். என்னை அநுவர்த்திக்க வேணு மென்றே மநோரதமுள்ள மநுஷ்யர்கள் எல்லாரும், யோகிகளுக்குக்கூட வாங் மநஸ்ஸுக்கு எட்டாமலிருக்கும் என்னுடைய ஸ்வபாவத்தைத் தங்களுடைய கண் முதலான இந்த்ரியங்களாலே ஸர்வ ப்ரகாரத்தாலும் அநுபவித்து அநுவர்த்திக்கிறார்கள்" என்கிற அர்த்தமுள்ள இந்த ஶ்லோகம் எம்பெருமானுடைய அர்ச்சாவதாரன்றாக வெளியிடுகிறது.

'இப்படி சேதநர்களை உஜ்ஜீவிக்கும் பொருட்டே ஸத் என்றும் அத்விதீயமென்றும் வ்யவஹரிக்கப்படும் ஶ்ருதிப்ரதிபாத்யமான ஜ்யோதிஸ், நாநாவிதமான ரூபங்களை எடுத்துக்கொண்டு ஜநிக்கிறது' என்பது தான் நமது ஸித்தாந்தம். "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்றன்றோ ஶ்ருதி சொல்லுகிறது?

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

# லக்ஷ்மீ தத்வம்.

(தொடர்ச்சி).

நாராயணனுக்கு லக்ஷ்மீ அப்ருதக்ஸித்த விசேஷணமென்று ஒப்புக்கொள்வதில் ப்ரமாணம்தான் சரணம். "யயா வ்ருஹாம ணொத்தக்ஷஷூதூரூஹரொ நிஹரோஹ்யிக: - ஸ்ரீரோநவி தயெயெ வ ஸ்யாக வதி: வத்நமணொளத:" என்று க்ரோடீகரித்திருப்பதுடன், "கவ்ரூயெம் ஹி தஜெத்ஜொ யஸ்ய ஸா ஜநகாத்ஜா" என்று ஆதி உபப்ரும்ஹணரூபமான ஸ்ரீ ராமாயணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது - ப்ரபா ப்ரபாவாங்களுக்கு இருக்கிற ஸம்பந்தம் போலவும், மணி தீதிகளுக்கு உள்ள ஸம்பந்தம் போலவும், புஷ்பத்துக்கும் அதன் பரிமளத்துக்கு முள்ள ஸம்பந்தம் போலவும் நிற்கிறது லக்ஷ்மீ நாராயணர்களுடைய ஸம்பந்தம் என்று அர்த்தம். ஆகையால், ஜகத் ரக்ஷணம் முதலிய எல்லா வ்யாபாரங்களும், லௌகிக பதி பத்நீ ந்யாயம் போலப் பதி ப்ரதாநமாகச் சொல்லப்பட்ட போதிலும், 'ஒக்ஷ்ரூயாஸஹ' என்று இரண்டு பெயர்களாலும் சேர்ந்தே நிர்வஹிக்கப்படுகின்றன வென்று நாம் தாத்பர்யங் கொள்ளவேண்டும். இந்த அப்ருதக்ஸித்த விசேஷண ரூபமான ஸம்பந்தத்தை ஸ்ரீ பட்டரும் ஓரிடத்தில் வெளியிட்டிருக்கிறார். "ஹூத: ஸ்ரீஹூஸம்விஷொஹூ ஸிதத ஷணவெஷ ஹமவாங் கவதாயதிழூகெஸ்வ்ருஹவதவாராயீந விஹவ: - ஹூயாதீஹூ்யாரூஹூம் ஹவதவி ஜஹாவஹம் நவிமணம் நகணூ ஹூாதம்த்ரூ்யம் நஹி ஹவதிவாந்யாஹிதமணம்." இதன் தாத்பர்யம் - நல்ல காந்தியினால் ரத்நம் ப்ரகாசிக்கிறது என்றும், நல்ல தேஜஸ்ஸினால் ஸூர்யன் ப்ரகாசிக்கிறான் என்

றும் சொல்வது போல, பகவானுடைய ஐச்வர்யம் லக்ஷ்மியினிடத்தில் இருக்கும் ஐச்வர்யத்தைச் சார்ந்தது என்று சொல்லப்படுகிறது. அதாவது - இவர்களுடைய ஸம்பந்தம் அப்ருதக் ஸித்தம் என்று ஸூசிதம். "தவக்ஷஃஸ்தல நித்யவாஸரஸிகாம்" என்று சொல்லப்படுகிற லக்ஷ்மிக்கும் "க்ருஷ்ணாஜினேன ஸம்வ்ருண்வன் வக்ஷஃஸ்தலாலயாம்" என்று வாமநாவதாரம் செய்த பகவானுக்கும் நித்யயோகம் உண்டு என்று பரச்சதமான ப்ரமாணங்களால் ஸ்தாபிக்கக்கூடும். "ஸ்ரீமத்" என்கிற சப்தத்திலுள்ள "மதுப்" ப்ரத்யயத்துக்கு நித்ய யோகம் தாத்பர்யமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி அப்ருதக் ஸித்தமான விசேஷண விசேஷ்யங்களைப் பிந்ந பிந்நங்களான இரண்டு வஸ்துக்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஈச்வரன் லக்ஷ்மீ விசேஷண விசிஷ்டனாகவே மோக்ஷ ப்ரதனாகிறான்; அப்படியே உபாயமாகிறான். உபாய தசையிலும் உபேய தசையிலும் ஸபத்நீகனாகவே இருக்கிறபடியால் விசிஷ்டனான நாராயணனிடத்தில் எல்லாத் தர்மங்களும் அப்ருதக் ஸித்த விசேஷண பூதையான லக்ஷ்மியினிடத்தில் நிராகேக்ஷபமாக அந்வயிக்கின்றன. ஆகையினால், த்வைராஜ்ய தோஷத்துக்கு எவ்வித ப்ரஸக்தியு மில்லை. இந்த மாதிரி அப்ருதக் ஸித்த ஸம்பந்தமுள்ள இந்த நித்ய தம்பதிகள் பரஸ்பரம் ஸாதகமாக சரணாகத ரக்ஷண விஷயத்தில் உபயநிஷ்டமான தர்மங்களையும் நித்யமான ஸ்வேச்சையாலும் ஸ்வஸங்கல்பத்தாலும் விபாகித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் இது எப்படி துர்ப்போதமான விஷயமாகும்?

சிலர் பகவானைக் காட்டிலும் லக்ஷ்மிக்கு அதிகமான உத்கர்ஷம் உண்டு என்று சில ப்ரமாண வாக்யங்களைக்கொண்டு வாதம் செய்வது உண்டு. அந்த வாக்யங்களாவன: — "யஸ்யாஸ்தே மஹிமாநம் ஆத்மந இவ த்வத்வல்லபோபி ப்ரபுர் நாலம் மாதுமியத்தயா நிரவதிம் நித்யாநுகூலம் ஸ்வத:", "ஸ்தோத்ரம் ஸாதம் ததாந்தே ஸ்வம் ஸம்ஸ்துவந்தி ஸ்வஸதா..."

வதி வஶ நிக்ஷஷ ஸயெ'', ''ஜவாமா ஹ-ஙியாமொஸா யடிவஸி வாம் ஸ்ரூஹ தஷஹ-ஙிக'' இவை முதலான பட்டருடைய வாக்யங்கள்; ''யஸ்யாவீக்ஷ்ய ஓவம் தஷிமிதவாா யீமொ வியதெஞவிஷம்'' என்கிற கூரத்தாழ்வானுடைய வாக்யம்; ''ஜமதூஓஷம் யஷவாம ஸம்ஶ்ரயம்'' என்கிற ஆளவந்தாருடைய வாக்யம்; ''க்ஷயா செவி வஸிதஷ்கும் ஸகஷம் ஹவநதுயம் - விநஷ்வ்ராயஓஹவக்ஷயெஷாநீம் ஸமெயிதம்'' என்கிற ஸ்ரீ விஷ்ணுபுராண வாக்யம், இத்யாதிகள். இந்த வாதத்துக்கு இவைகள் ப்ரமாணமாகமாட்டா. லக்ஷ்மியுடன்கூட அவளுடைய லீலார்த்தமாகப் பகவாந் ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதிகளைச் செய்கிறான் என்று அந்தப் பட்டர் வாக்யங்களாலேயே ஏற்படுகிறது. ''ஸ்ரீயெயம் வஶ நாநாயாஸ்ய ஈஸஷாஸ்யா செதகாஸ்யாதயா'' என்றும், ''ஶஷ்வாதீநு விஷயாநு வ்ரஷஸ்ய'' என்று ஆரம்பித்து ''தவ வரீஹாஸாதுநெ கெஜெ'' என்றும், ''ஹெஷாயாஓவிஷம் வராவாஓிஷம் ஹொமெ விஹ-ஙிதிஃ வாா'' என்றும் அந்த ஸ்ரீகுண ரத்ந கோஶத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது - ஸ்ரீ பகவாந் லக்ஷ்மியினுடைய லீலார்த்தமாகவே ஶப்தம் முதலிய விஷய ப்ரதர்ஶநரூபமான விபவத்தைக் காண்பித்து ஜகத் வ்யாபாரங்களைச் செய்கிறான் என்றும், இந்த விபூதி முழுவதும் லக்ஷ்மியின் லீலைக்காகவே பகவானால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் இந்த வாக்யங்களின் கருத்து. இந்த வாக்யங்கள் எல்லாவற்றையும் ஸமந்வயம் செய்து பார்த்தால், இவர்களுக்குள் உத்கர்ஷா பகர்ஷங்கள் சொல்வது ஸரியன்று என்று ஏற்படும். இவர்களுடைய பதிபத்நீத்வமும், பும்ஸ்த்வ ஸ்த்ரீத்வமும் இவர்களுடைய நித்யேச்சாதீநமென்றே ஸித்தம்.

''ஏகமெவா த்விதீயம் ஸ்ரஹ்ம'' என்கிற வேதாந்த வாக்யம் வஸ்த்வந்தரத்தை நிஷேதிக்கையிலும், அப்ருதக்ஸித்த விஶேஷண பூதையான லக்ஷ்மியை நிஷேதிப்பதில் தாத்பர்ய முள்ளதன்று என்று பெரியோர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். ''நாா நாரீ ஓயொஹஸிஃ'', ''நாராயணாத்திகீம் செவீம்'', ''த்வம் யாஷ்ஶொஸி கஓஷாஓவி தாஷ்ஶீம் தெ ஷாாநு வஷந்தி

யஃவயொ ஙூதஃ ஹெஉஹ்ஂய: - ஊயா விஹக்ஷு யஃவதீதஙஃ ஜெகஜெவ த்வாஂ ஊதாஸஂவ விதாஸஂவ யஃவாஙு ஊஹஃ:”
என்கிற ப்ரமாணங்கள் இந்த நிர்ணயத்துக்கு த்ருடமான ஸாதகங்கள் ஆகின்றன. அதனுல் தான், ஐக்யத்தைச் சொல்லுகிற ஶப்தத்துக்கு ஸ்வரூபத்தின் ஐக்யத்தில் அபிப்ராயமில்லை யென்றும், ப்ரகாரத்தின் ஐக்யத்தில் தாத்பர்ய மென்றும், உபய விபூதி ரூபங்களான எல்லாவித ப்ரபஞ்சத்திற்கும் ஏகஶேஷித்வாஸ்ரயத்வத்தில் தாத்பர்ய மென்றும் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. மஹேந்த்ரனைத் தேவதையாக வுடைய யாகத்தில் மஹத்வ விஶிஷ்டனை இந்த்ரனிடத்தில் தேவதாத்வம் எப்படி தாத்பர்யமோ, அக்நீஷோம யாகத்தில் அக்நி ஸோமன் இந்த இரண்டு தேவதைகளிலும் பர்யாப்தமான ஏகதேவதாத்வம் எப்படி தாத்பர்யமோ, அப்படியே ஸ்ரீ விஶிஷ்டனை நாராயணனிடத்திலேயே முற்கூறிய வேதாந்த வாக்யங்களுக்குத் தாத்பர்ய மென்று தெரிந்து கொள்ளவேணும். இந்த அர்த்தத்தைத்தான் த்வயத்தின் பூர்வகண்ட உத்தரகண்ட நிஷ்டங்களான “ஸ்ரீமத்” ஶப்தங்கள் ஸூசிப்பிக்கின்றன. உபாய தஶையிலும் உபேயதஶையிலும் நாராயணன் ஸ்ரீ விஶிஷ்டனுகவே (அதாவது - ஸபத்நீகனுகவே) இருக்கிருன் என்பதை இந்தப் பதங்கள் விளக்குகின்றன. அநந்யோபாயத்வத்துக்கு விருத்தமான உபாய த்வித்வ ஶங்கையும், அநந்ய ப்ரயோஜநத்வத்துக்கு விருத்தமான உபேய த்வித்வ ஶங்கையும் பரிஹ்ருதங்களாகின்றன. ஆனுல், ‘ப்ரபஞ்சம் நாராயணனுக்கு ஶேஷ பூதம் போல லக்ஷ்மிக்கும் ஶேஷ பூதம் என்று ப்ரபஞ்சத்துக்கு உபய ஶேஷத்வம் ஸம்பவிக்கிறதே’ என்று ஆக்ஷேபிக்கலாம் “வதிஃ ஊ்ஂவ்யஂ வத்ஃா கவி” என்கிற ந்யாயத்தால் பதி ஸ்வத்வம் ஏற்பட்டிருக்கும் இடங்கள் எல்லாவற்றிலும் பத்நீ ஸ்வத்வம் ஏற்படுவதில் பாதகஸம்பாவனை ஒன்றும் தெரியவில்லை.

இப்படி லக்ஷ்மிக்கு விபுத்வமும் ஈஶ்வரத்வமும் ஸித்திக்கிறது போல, பூதேவி நீளா தேவி ப்ரப்ருதிகளுக்கும் அவைகள் ஸித்திக்குமோ ? என்கிற ஶங்கைக்கு அவகாஶமே இல்லை. லக்ஷ்மிக்கு

இவைகள் ஸித்தித்தற்கு ஹேது, ப்ரமாண வாக்யங்களே. அப்படிப் பட்ட ப்ரமாண வாக்யங்கள் மற்றைத் தேவிகள் விஷயத்தில் காணேம். "ஶாஂஸ்வாஸீம் ஸவபூல-ரிதாநாம் த்வாஜிஹோரவஹ்வயே ஶ்ரியம்," "த்வயேத ஜிஷ்ணா வாஸ்வ ஜமஹ்வ்யாஹ்வம் வராவரம்" என்கிற ப்ரமாண வாக்யங்கள் ஸ்ரீ தேவிக்கு ஸர்வபூத ஈஶ்வரித்வத்தையும் ஜகத்வ்யாபித்வத்தையும் ஸ்தாபிக்கின்றன; இதர தேவிகள் விஷயங்களான பூஸூக்தம் நீளா ஸூக்தம் முதலிய ஶ்ருதிகளில் அவைகளை ஸ்தாபிக்கக்கூடிய வாக்யங்கள் இல்லை யென்று ஆசார்யர்கள் நிஶ்சயம் செய்திருக்கிறார்கள். இந்த அர்த்தத்தையே ஸ்ரீபட்டரும் ஸ்ரீகுணரத்நகோஶத்திலே "ஹோமூா வாஉ வி நாஙூரீயகதயா வஹ்வாஂம ஶாமெ ஸூஂ நிவ்ருத்த வ்ருணயாதி வாஹந வியள நீதாஃ வரீவாஹதாம் - தேவி த்வாஉநா நீஐயா ஸஹ உஹிதெவ்யஃ ஸஹஸ்ரம் தயா யா ஹிஸ்த்வம் ஸ்த ந வாஹா ஓ்ருஷிஸிவ ஸ்வாஹிஃ வியம் ஶ்ரயவெ" என்கிற ஶ்லோகத்தால் வெளியிட்டிருக்கிறார். இதன்தாத்பர்யமாவது - ஜலம் பூர்ணமாயுள்ள ஒரு பெரிய தடாகத்தில் ஜலம் அதிகப்பட்டால் கரை உடைந்து போகாமல் இருக்கும் படி ஒரு கோடி திறந்துவிடுவது போலவும், பூர்ண ஶ்ருங்கா ரத்தின் அநுபவத்துக்குப் புஷ்ப சந்தநாதிகள் விக்நமாகாமலிருப்பது மல்லாமல் ஸஹாயங்களாக இருக்கின்றது போலவும், ஸ்தந பாஹு த்ருஷ்டி முதலியவைகள் ஶ்ருங்காராநுபவ ஸுகத்தினுடைய அபிவ்ருத்திக்கு ஹேதுவாகிறது போலவும், பூமி நீளா முதலிய தேவிகள் லக்ஷ்மியை அநுஸரித்தே லக்ஷ்மிக்கு அங்கபூதைகளாக இருந்துகொண்டு அந்தத் திவ்ய தம்பதிகளுடைய அநுபவத்துக்கு எவ்விதமாகவும் விக்நமாகாமலே போக்யர்களாகிறார்கள்.

இந்த உபந்யாஸத்தில் கண்டிருக்கும் விஷயங்களுக்கு முக்யாதாரமான ப்ரமாணங்கள், விஶேஷித்து அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையிலும் லக்ஷ்மீ தந்த்ரத்திலும் இருக்கின்றன.

எம். திருவேங்கடாசார்யர்.

வாயுவை மேல் நோக்கும்படி செய்தலாகிற ரேசகம், (14) மேல் போகாமலும் கீழ்ப் போகாமலும் ப்ராண வாயுவை அந்த அந்த இடத்திலேயே இருக்கும்படி செய்தலாகிற கும்பகம் இவைகள் தான். இவற்றுள் 1-முதல் 4-வரையிலுமுள்ளவை த்ரவ்ய வ்யய ஸாத்யங்களாகையால் த்ரவ்ய யஜ்ஞங்கள் என்றும், 12-13-14-வது பாகங்கள் ப்ராணயாமங்கள் என்றும் சேர்த்தும் சொல்லப்படும். இந்தப் பதினுலு கர்மங்களில் சில நித்யகர்மங்களிற் சேர்ந்தவை யாகையால் எல்லாக் கர்ம யோகிகளும் அவைகளை அநுஷ்டிக்கவேண்டியது அவஶ்யமாக இருந்தாலும், அங்கியாக ஸங்கல்பித்துக் கொள்வதி லுள்ள வ்யத்யாஸத்தை முன்னிட்டு இப்படிப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இவைகள் எல்லாவற்றையும் ஸாத்விகத்யாகத்துடன் செய்யவேண்டும். ஸாத்விகத்யாகமென்பது, பலத்யாகம் ஸங்கத்யாகம் கர்த்ருத்வத்யாகம் ஆகிற மூன்றுவித த்யாகங்களைக் குறிக்கும். பல த்யாகமாவது - அந்தந்தக் கர்மத்துக்குப் பலமாக ஶாஸ்த்ரங்களிற் சொல்லப்பட்டிருக்கும் ப்ரயோஜநத்தை உத்தேஶிக்காமல், பகவானுடைய ஆராதநமாய் அவனுடைய ப்ரீதிக்காகச் செய்கிறதான அநுஸந்தாநம். ஸங்கத்யாகமாவது - இந்தக் கர்மத்தை நம்முடைய பலத்துக்காகச் செய்யவில்லை, ஆகையால் இது நம்முடையது அன்று, பகவானுடையது என்று அநுஸந்திக்கை. கர்த்ருத்வ த்யாகமாவது - நான் ஸ்வதந்த்ரனல்லேன், தான் கொடுத்த ஶரீரத்தைக்கொண்டும் தான் கொடுத்த த்ரவ்யம் முதலிய உதவியைக்கொண்டும் தனக்குக்கீழடங்கிய இந்த ஆத்மாவைக் கொண்டும் எல்லாவற்றிற்கும் ஶேஷியாகிய தானே நடத்திவைக்கிறான் என்று எண்ணுகை.

தான் கர்த்தாவாக இருக்கக் காண்கையாலும், ஶாஸ்த்ரங்களில் தன்னையே கர்த்தாவாக விதித்திருக்கையாலும், தான் கர்த்தாவல்லன் என்பது எப்படிப் பொருந்தும்? மேலும், ஶாரீரக ஸூத்ரத்தில் வ்யக்தமாகவே “கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத்” என்கிற அதிகாரத்தில் ஜீவனுக்குக் கர்த்ருத்வமுண்டு என்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு இது விரோதமாகாதோ? என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். இவ்விடத்தில் ஶாஸ்த்ரங்களாலும் அநுபவத்தாலும் ஏற்படும் கர்த்ருத்வம் நிஷேதிக்கப்படவில்லை. ஆனால், ஸ்ரீ பகவத்கீதை 18-வது அத்யாயத்தில் 14-15-வது ஶ்லோகங்களிற் சொல்லியபடி ஐந்து ஹேதுக்கள் சேர்ந்து செய்யக்கூடிய கார்யத்தில் தான் ஒருவனே கர்த்தாவென்று நினைப்பதும், ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற குணங்களோடு சேர்ந்திருப்பதால் ஏற்பட்ட புண்யபாபங்களின் கர்த்ருத்வத்தைத் தன் ஸ்வரூபத்தைப் பற்றியது என்று நினைப்பதும் கூடாது என்று மாத்திரம் சொல்லப்படுகிறது. இவ் விஷயம், ஸ்ரீ பகவத்கீதை 3-வது அத்யாயம் 30-வது ஶ்லோகத்தின் பாஷ்யம் தாத்பர்ய சந்த்ரிகைகளில் வ்யக்தமாக விளங்கும்.

இந்தக் கர்மயோகம் ஜ்ஞாந யோகத்தை ஸாதித்துக் கொடுத்து அதன் வழியாக ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமாகிறது என்று 2-வது அத்யாயத்திலும், கர்மயோகம் ஜ்ஞாநயோகம் இவைகள் தனித்தனியாகவே ஆத்மாவலோகநத்திற்கு உபாயங்களாகின்றன வென்று 3-4-5-வது அத்யாயங்களிலும் ஸ்ரீ கீதாசார்யன் அருளிச்செய்திருக்கிறான். இதுவுமன்றி, ஜ்ஞாநயோகத்தை விடக் கர்மயோகம் மிகவும் சிறந்ததென்றும் சொல்லியிருக்கிறான். இது எப்படி ஸம்பவிக்குமென்பதை ஆலோசிப்போம். ஜ்ஞாநயோகத்தைச் செய்கிறவனும் கர்மங்களைச் செய்யவேண்டியது அவஶ்யம்; நித்யகர்மங்களை க்ரமமாகச் செய்து அந்த யஜ்ஞத்தின் மிகுதியான அந்நத்தைக் கொண்டு ஶரீர தாரணம் செய்து வந்தால், முறையே பாபம் நீங்கி மநஸ் ஶுத்தமாகி ஆத்மாவின் அநுஸந்தாநம் நிலைநிற்கும். அப்படிக்கு இல்லாமல் ஏதாவது வ்யாபாரங்களைச் செய்து ஶரீர தாரணத்தை நடத்தினால் மநஸ் ஶுத்தி தவறிவிடும். ஶரீரதாரணத்திற்காக வ்யாபாரங்கள் செய்யாமலிருப்பதும் ஸாத்யமில்லை. ஆகையால், ஜ்ஞாநயோகிகளுக்கும் கர்மாநுஷ்டாநம் அவஶ்யமே. மேலும், லோகத்தில் ஜநங்களெல்லாரும் ஶாஸ்த்ரங்களைக் கற்றுணர்ந்து தங்கள் தங்கள் அதிகாரத்தைத் தெரிந்துகொள்வது என்பது ஸாத்யமில்லை. அயலாருடைய அநுஷ்டாநத்தைப் பார்த்து அதுபோலத் தாங்களும் அநுஷ்டிக்க யத்நம் செய்யும் ஶீலமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். ஆகையால், வ்யபதிஷ்டர்களான சிலர் ஜ்ஞாநயோகத்துக்கு அதிகாரிகளாக இருந்து ஜ்ஞாநயோகத்தை அநுஷ்டிக்கும் பக்ஷத்தில், அதைப்பார்த்து அந்த யோகத்துக்கு அநர்ஹர்களாக இருக்குமவரும் அந்த யோகத்தை ஆரம்பித்து அதை முடிக்க ஶக்தியற்றவர்களாய் விநாஶம் அடைவார்கள். இப்படி லோகத்தாரைக் கெடுப்பதுமன்றி அப்படிக் கெடுப்பதனால் உண்டாகும் பாபம் அந்த வ்யபதிஷ்டர்களையும் ஜ்ஞாநயோகத்தை விட்டுத் தவறும்படி செய்துவிடும். ஆகையால், லோக ஸங்க்ரஹத்தைப் பார்த்தும் எல்லாரும் கர்மத்தைச் செய்ய வேண்டியது என்றே ஏற்படுகிறது. தவிரவும், மநுஷ்யர்களின் ஶரீரம் இந்த்ரியம் முதலியவைகளுக்கு அதனதன் வேலைகளைச் செய்தே பழக்கமாயிருக்கிறது. அந்த வேலைகளை முற்றிலும் விட்டுக் கேவலம் ஆத்மாவை த்யாநம் செய்வதும் முடியாத கார்யம். அப்படி முடிந்தாலும், ஏராளமான வெள்ளத்தை முற்றிலும் தடுத்தால் அது அணையை மீறிக் கிளம்பிவிடுவதுபோல, ஓடிக்கொண்டிருந்த இந்த்ரியங்களை முற்றிலும் அடக்கினால் அந்த இந்த்ரியங்கள் கொஞ்சகாலத்துக்குள் ராக த்வேஷாதிகளை முன்னிட்டுக் கிளம்பிவிடும். இந்தக் காரணத்தை உத்தேஶித்தும், இந்த்ரியங்களை நல்ல விஷயங்களிலும் ஶாஸ்த்ரத்திற் சொல்லிய கர்மங்களிலும் மூட்டுவதாகிற கர்மாநுஷ்டாநமே எல்லாருக்கும் ஶ்லாக்யம். இதனாலேயே ஜ்ஞாந யோகத்தைவிடக் கர்மயோகம் ஸுலபமென்றும் சொல்லுகிறார்கள்.

இந்தக் கர்மாநுஷ்டாநங்களில் கொஞ்சம் தேஹ ஶ்ரமம் முதலிய வருத்தங்க ளிருந்தாலும், அந்தக் கர்மங்களை நமக்கு ப்ரியதமனான ஸ்நேஹித

ஞகவும் அத்யுதாரனுன யஜமாநனுகவு மிருக்கும் பகவானுடைய த்ருப்திக் காகச் செய்கிறேமென்று உணர்ந்து செய்தால், அந்த அநுஷ்டாநங்கள் செய்யும்பொழுதே மிகுந்த ஸந்தோஷத்தைக் கொடுக்கும். இப்படிக் கர்மங் களை அநுஷ்டிப்பதே தமக்கு மிகவும் இஷ்டமான மதமென்றும், இது ஸர்வதா நல்லகதியைக் கொடுக்கு மென்றும், இப்படிக் கர்மாநுஷ்டாநம் செய்யாதவர்கள் ஸம்ஸாரத்திலேயே மூழ்கிக் கிடப்பார்களென்றும் ஸ்ரீ க்ரு ஷ்ணன் கீதையில் நன்ருக விவரித்திருக்கிருர். இன்னும் சொல்லவேண்டிய விஷயங்கள் அநேகமிருந்தும் அவகாஶமில்லாததால் ஸப்யர்களின் அநுமதி யின்பேரில் இதனுடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

ஆனல், நிறுத்து முன் என்னுடைய க்ருதஜ்ஞதையைத் தெரிவித் துக்கொள்ளுதற்பொருட்டு ஒரு விண்ணப்பம் செய்கிறேன்: அதாவது - இந்த ஸபைக்கு ஶிஷ்யஸபை யென்று திருநாமம் வாய்த்திருந்தாலும், இதை ஆசார்யஸபை யென்றே நான் மதிக்கிறேன். ஏனெனில், இப்படிப் பட்ட மஹான்கள் கூடி அபூர்வமான விஷயங்களை உபந்யாஸஞ் செய்வ தனுல் என் போல்வார்க்குத் தெரியாத விஷயங்களைத் தெரிந்துகொள்ள அவகாஶம் உண்டாகிறது. அதற்கு இந்த ஸபையே காரணமாக இருப்ப தனுல், ஆசார்ய ஸபையென்று சொல்வதில் ஆக்ஷேபமில்லை. இது ஆசந் த்ரார்க்கம் நீடந்து அதனுல்,

பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்று மில்லை
கலியும் கெடும் கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்திசை பாடியாடி யுழிதரக் கண்டோம்.

என்று நம்மாழ்வார் மங்களாஶாஸநம் ஸபலமாகும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ மனை ஸதா ப்ரார்த்திக்கிறேன்.

---

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

## ஸ்ரீ ராகவனுடைய ப்ரதிஶயநம்

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

1. ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஸமுத்ர ராஜனை ஶரணகதிசெய்த விஷயமாகச் சென்ற வருஷத்திய 11 - வது ஸஞ்சிகையில் ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி இன்னும் சில ஆக்ஷேபங்களை அருளிச் செய்திருப்பதைப் பார்த்து, "ஸாவஜ்ஞ்யே த்வவிஶேஷம் ஸ்வ ஹ்வதிஹ ஸதார்ஸ்வ கஸ்வ்யா நஸ்கஸ்வா" என்கிற ஆசார்யனுடைய திவ்ய ஸூக்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டினவரையில் சில ஸமாதானங்களை எழுதத்துணிகிறேன்.

"ஸ்ரீ பரதன் அநுஷ்டித்தது ஶாஸ்த்ரீய ப்ராயோபவேஶமன்று என்பதற்கு த்ருஷ்டாந்தத்தி லிருக்கும் வாக்வாஶ்வாஷ்டி ஶப்தங்கள் ப்ரமாணமாகுமோ?" இவ்விடத்தில் த்ருஷ்டாந்தம் ஏது? ஶ்லோகத்தின் இரண்டு பாதியும் வேறுவேறு விஷயமோ? "ப்ராஹ்மணோ ஹ்யகவா ஶ்வேந மாநோந்த்யேத் திஹாஹந்தி - நதா ஐயந்தாவஸிகதா நாம் விபி: ஸ்தத்யேவ வேஶ்ய ந" என்கிற முன் பாதி த்ருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்டது என்பதற்கு த்ருஷ்டாந்தத்தைக் காண்பிக்கும் பதங்கள் ஒன்றுமில்லை. அத்யாஹார மில்லாமலே அர்த்தம் பொருந்துகிற படியால் அதற்கு அவஶ்யமுமில்லை. இரண்டு பாதிகளிற் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தம் ஒன்றென்றே தோன்றுகிறது. ஏனெனில், ராஜாவுக்கு ப்ராயோபவேஶத்தில் அதிகாரமில்லை யென்பதற்குக் காரணமாக ப்ராஹ்மணன் ஒரு பக்கத்தால் வழி மறிக்கலாம் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. 'ஹி' என்கிற பதத்தால் இது ஏற்படும். இரண்டும் வேறு வேறாயிருந்தால் ஒன்றுக்கொன்று எப்படி காரணமாகும்?

2. ''அஞ்ஜலிம் ப்ராங்முகஃ க்ருத்வா'' என்கிற ஶ்லோகத்தைப் பார்த்தால் ஸ்ரீ ராமனும் ஏக பார்ஶ்வ ஶயநம் செய்ததாகவே அர்த்த மாகும்.'' 'ப்ராங்முகஃ அஞ்ஜலிம் க்ருத்வா' என்றும் அன்வயம் சொல்லலாமே. இப்பொழுது அர்ச்சாவதாரத்தில் அசையாமலிருப்பது அப்பொழுதும் இப்படியே அசையாமற் கிடந்தா ரென்பதற்கு ப்ரமாணமாக மாட்டாது. அப்படி ஏக பார்ஶ்வ ஶயநத்தை ஸ்ரீராமன் அநுஷ்டித்ததாக இருந்தாலும் மற்ற ஶப்தாந்தர குணாந்தராதிகளால் இதற்குப் பேதம் ஸித்தம்.

3. ''ரோதநம் என்றல் அஶாஸ்த்ரீயமான மறிப்பாகத்தான் இருக்க வேணுமோ? ஶாஸ்த்ரீய கார்யத்திற்கு லௌகிக த்ருஷ்டாந்தம்கூடாதோ?'' ரோதநம் என்பது இவ்விடத்தில் அஶாஸ்த்ரீயமான மறிப்பைத்தான் சொல்லுகிறது. ''ஶேஷ்யே புரஸ்தாச் சாலாயாம் யாவந்மே ந ப்ரஸீததி - நிராஹாரோ நிராலோகோ தநஹீநோ யதா த்விஜஃ'' என்கிற ஶ்லோகத்தைப் பார்த்தால் பணமிழந்த ப்ராஹ்மணனைத் தனக்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லி யிருப்பதாக ஏற்படும். இதை அநுஸரித்து வ்யாக்யாநங்களிலும் ''ப்ராஹ்மணோ ஹ்ருதஸர்வஸ்வ:'' என்பதில் இருக்கும் ப்ராஹ்மண ஶப்தத்துக்கு 'கடன் கொடுத்து வட்டியுடன் வாங்குகிற ப்ராஹ்மணன்' என்று அர்த்தம்: 'ப்ராஹ்மணோ ஹி ஸ்வதநேந வ்ருத்தி ஸஹித தந க்ருஹீதா உத்தமர்ணஃ' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், 'க்ஷத்ரியாணாம் உத்தமர்ணே ப்ராயஶ்சித்தம் இதி ஸம்ப்ரதிஷ்டிதம்' என்றும் வ்யாக்யாநத்தி லிருப்பதால், இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் செய்யக்கூடாததே என்று வ்யக்தமாகிறது. அது வேறு இவர் செய்கிறது வேறாக இருந்தால் இவ்விருவருக்கும் ஸமாந தர்மமில்லாமற்போய் விடுமே! தத்கத பூயோ தர்மவத்த்வம் அன்றோ ஸாத்ருஶ்ய பதத்தின் அர்த்தம்? த்விஜ இவ ஶேஷ்யே என்பதில் ஸ்பஷ்டமாக ஏற்பட்டிருக்கும் ஶயந மாகிற ஸமாநதர்மத்தை விட்டு வேறு ஸமாநகல்பநம் உசித மாகுமோ? ஆகையால், பணமிழந்த ப்ராஹ்மணனைத் தனக்கு த்ருஷ்டாந்த மாகச் சொல்லிக்கொண்டபடியால், இவ்விருவருடைய ஶயநமும் ஒன் றென்றே சொல்லவேணும்.

4. ''வழிமறிக்கத் தர்ப்பாஸ்தரணமும் வேணுமோ?'' ''உபஸ்தாநாய ஸாகரஸ்ய'' என்கிற இடத்திற் சொல்லியிருக்கும் தர்ப்பாஸ்தரணம் ஶயநத்துக்கு அங்கமானது அன்று; பூமி ஶுத்தமாவதற்காக வென்

$10\frac{1}{2}$

பது, கோவிந்தராஜீயத்திலிருக்கும் வாவந ஸ்வாயடிம் என்கிற பதத்தால் ஏற்படும்.

5. "வியிஃ ஹுதவுவஸெந என்பதிலிருக்கும் விதி என்னும் பதத்தைக் கவனிக்கவேண்டாமோ?" கவனித்தால் என்ன ஏற்படுகிறது? 'ராஜாக்களுக்கு இப்படி நிர்ப்பந்தம் செய்வதில் விதியில்லை' என்பதால் இது விஹிதமென்று ஏற்படுமோ? ப்ராஹ்மணனுக்கு ஸுராபாநம் செய்ய விதியில்லை யென்றால் அது ஶாஸ்த்ரீயமான கார்யமென்று எப்படி சொல்ல முடியும்?

6. "ஊரஹணம் வ்ரதம் என்பதிலுள்ள வ்ரத ஶப்தார்த்தமும், ஊரம் வ ஹூரஶ தயொஉகம் என்கிற விடத்திலுள்ள க்ஷத்ரிய விஹித ஹுதவுவஸெந ஹாயஸ்சித்தாயஉம் என்கிற வாக்யமும், வாகவாஹூஹஸஷம் ஹுதவுவஸெ யஉஹாஞரொவ லக்ஷணம் என்கிற வாக்யமும் இந்த அர்த்தத்திற்குப் பொருந்துமோ?" பொருந்தும்; வ்ரதம் என்பது, ஸங்கல்ப பூர்வகமாக உறுதியுடன் அநுஷ்டிக்கிற கார்யங்களைக் காட்டும். ஶாஸ்த்ரீயமாகத்தான் இருக்கவேணும் என்கிற நிர்ப்பந்த மில்லை. ஸாமாந்யமாக அந்தப்பதத்துக்கு ஶாஸ்த்ரீயம் என்கிற அர்த்த மிருந்தாலும் பூர்வோத்தர ஸந்தர்ப்பங்களைப் பராமர்ஶித்தால் இங்கு ஶாஸ்த்ரீய கார்யமென்று அர்த்தஞ்சொல்ல முடியாது; ராக ப்ராப்தமேயானாலும் நிஷேதம் வரலாம். கபிலாக்ஷீரபாநம் ஶூத்ரனுக்கு ராக ப்ராப்தமானாலும் நிஷேதிக்கப்பட்டிருக்கிறதன்றோ? வாகவாஹூ ஶயநரூபமான நிர்ப்பந்தம் லௌகிகமானாலும் க்ஷத்ரியனுக்கு நிஷித்தமாகையால் அதைச் செய்ததற்காக 'ஊரம் வ ஹூரஶ தயொஉகம்' என்று ப்ராயஶ்சித்த விதி கூடும். 'ஸுவிஹித' என்ற வ்யாக்யாநங்களின் ப்ரயோகம், 'நகஹ-வியிஃ ஹுதவுவஸெந' என்கிற மூலத்தை அநுவதிக்கிறதாக இருக்கலாம். அல்லது, 'ஸதாஜெதஉமஹிஹதம்' என்கிற இடத்தில் அபயப்ரதாந ஸாரத்தில் அருளிச்செய்திருப்பது போல, விஹிதவிநம் - நிஷிஉம் என்கிற அர்த்தத்தையுஞ் சொல்லலாம். 'ஹுதவுவ வெஶ யஉஹாஞரொவலக்ஷணம்' என்பதும், லௌகிகமான கார்யத்துக்கு லௌகிகங்களாகவே சில அங்கங்களும் ஸம்பவிக்கலா மாகையால், அது இவ்விடத்தில் 'நிராஹாரோ' என்று சொல்லப்பட்டிருப்பதால், அவற்றுக்கும் உபலக்ஷணமென்று சொல்வதில் அநுபபத்தி இல்லை.

7. "ஜடிலஞ் சீரவஸநம் என்று ஜடை மரவுரி முதலியவைகளைத் தரித்துக்கொண்டிருந்த பரதனைப் பார்த்தும் மறுபடியும் ஸ்ரீராமனுக்குப் பரதனிடம் அபிஷிக்த புத்தி வருமோ?" வரலாம்; வந்துமிருக்கிறது. ஜடை முதலியவைகளைத் தரித்துக்கொண்டிருந்த பரதனைப் பார்த்தும் ஸ்ரீராமன் கச்சித் ஸர்க்கத்தில் 'ராஜ தர்மங்களை ஸரியாக நடத்திவருகிறாயா?' என்று விஸ்தாரமாகக் கேட்கவில்லையோ? 'பரதன் ராஜ்ய பரிபாலநஞ் செய்யவில்லையென்று ஸ்ரீ ராமன் தெரிந்துகொள்ளவில்லை' என்கிற ஸமாதாநம் இவ்விடத்திற் சொல்வது போல அவ்விடத்திலும் சொல்லலாம்.

8. ஸ்ரீ தேஶிகனுடைய திவ்ய ஸூக்திகளில் பரஸ்பர விரோதம் போலத் தோன்றுகிறதற்கு ஸமாதாநம், ஃஹ்ர-வஶேஷ வாதம் என்பதே. இதைத் தவிர்த்து வேறு ஸமாதாநம் இருக்கிறதை, சரம ஶ்லோகாதிகாரத்திலும் அபய ப்ரதாந ஸாரத்திலும் உள்ள வாக்யங்களின் ஸ்வாரஸ்யத்தைப் பராமர்ஶித்துத் தாங்களேயாவது ஸதாசார்ய மூலமாகவாவது தெரிந்துகொள்ள வேணும். பரமரஹஸ்யமாகவும் துரூஹமாகவுமான அஸ்மதாசார்யன் திருவுள்ளத்தை நாம் ஸஹஸா நிர்த்தாரணஞ்செய்வது அபசாரத்துக்கு இடமாகுமென்று இதுவரையில் நிறுத்திக்கொண்டேன்.

9. ஸ்ரீ உ. வே. காறக்குறிச்சி ஐவாசார்யர் ஸ்வாமி ஸாதித்திருக்கும் ஸமாதாநத்தைப் பற்றி:—தர்ப்பாஸ்தரணாதி விஶிஷ்டமாயும் விலக்ஷணமாயுமிருக்கிற ப்ரபத்தி வேறென்று இருக்கிறது என்று ஓரிடத்திலிருந்தும் ஏற்படவில்லை. வஶீகரண விஹாமாதிகாரத்தில் மோக்ஷார்த்த ப்ரபத்திக்குப் பலத்யாகம் அங்கமென்று ஸாதிக்கிற இடத்தில் 'இது மோக்ஷார்த்த ப்ரபத்தியில் நியதம்' என்கையால், மற்றை அங்கங்கள் ஸர்வ ஸாதாரண மென்று ஏற்படுகிறது. "ஷடங்காம் பஞ்சாங்காம் ஸக்ருதிதி விமவஹ்ராஸ தெநேஷ மயாமஃ" - இந்த ப்ரபத்தியோகம் ஐந்து அங்கங்களை உடையது என்றும், ஆறு அங்கங்களை உடையது என்றும் இரண்டு வகைப்பட்டதாக மாத்திரம் சொல்லியிருக்கிறதே தவிர, இதற்கு மேல் வேறு ஒரு பேதம் இருப்பதாக அருளிச்செய்யப்படவில்லை. த்ரிஜடாதி ஶரணாகதிகளிலும் ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலான ஐந்து அங்கங்கள் மாத்திரம் உபபாதிக்கப்பட்டிருக்கின்றன. தர்ப்பாஸ்தரணாதி விஶிஷ்டமான ப்ரபத்தி வேறு இருந்ததேயாகில் சரம ஶ்லோகாதிகாரத்தில் 'தர்ப்பாஸ்தரணாதிகள் சொன்னது ப்ரதிஶயந ப்ரதாநமாகையாலே' என்று ஸமாதாநம் அருளிச்செய்திருக்க வேண்டாம்; அவ்விடத்திலேயே அவைகள் ப்ரபத்திக்கு அங்கமன்று என்றும் அருளிச்செய்திருக்கிறார். இன்னும் அநேக இடங்களில் இருக்கும் ஸ்ரீஸூக்திகளின் விரோதமும் ஸம்பவிக்கும். இவை யெல்லாவற்றையும் பார்க்கும்பொழுது ஸ்ரீ. உ. காறக்குறிச்சி ஸ்வாமியின் ஸமாதாநம் ஸ்வரஸமாகப் படவில்லை.

10. ஸ்ரீ. உ. வே. வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி ஸாதித்ததாக எழுதப் பட்டிருக்கும் ஸமாதாநத்தைப்பற்றி:—விபீஷணன் நினைவை அநுஸரித்து ஶரணாகதியாக அபயப்ரதாந ஸாரத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது என்ருல், அவ்விடத்தில், விபீஷணன், 'ஸ்ரீ ராமன் ஶரணாகதி செய்ய அதிகாரி' என்று நினைத்துத்தானே அப்படி உபதேஶம் செய்திருக்கவேண்டும். "ஸர்வ லோகஶரண்யாய ராகவாய மஹாத்மநே" என்று ஸுக்ருதி என்றும் சொல்லியிருக்கிருர். அப்படியிருக்க, அந்த இடத்தில் விபீஷணனுடைய அபிப்ராயத்துக்கு விரோதமாக 'அநதிகாரி க்ருதமாகையாலே' என்று செய்யப்பட்டிருக்கும் ஸமாதாநம் எப்படிப் பொருந்தும்? சரம ஶ்லோகாதிகாரத்தில் வாஸ்தவார்த்தத்தை அருளிச்செய்தாராகில் 'ப்ரதிஶயந ப்ரதாநமாகையாலே' என்பதும் ஆலோசிக்கத்தக்க விஷயமே. 'ஶரணாகதி பண்ணின இடத்திலும்' என்கிற வாக்ய ஸ்வாரஸ்யத்தைப் பார்த்தால் ஶரணாகதி செய்ததாகவும் அஸ்மதாசார்யனுக்குத் திருவுள்ளம் போலத்தோன்றுகிறதே. ஆகையால், இவ்வர்த்தங்களை முற்சொல்லியபடி யதாஶ்ருதம் யதா ஸம்ப்ரதாயம் தெளிந்துகொள்ள வேண்டியது.

யதிகிஞ்சித் அஸூயாஸஹிதம் ந்யாயவிதஃ ஸ்வயம் ।
க்ஷந்தவ்யம் அதஸாஹஸம் ஶேஷத்வ லக்ஷணாந்விதாயவஃ ॥

திருவல்லிக்கேணி
9—3—1912.

சே. நரஸிஹ்மாசார்யர்.

(2)

## ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருதம்.

வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ க்ருஷ்ணகர்ணாம்ருதத்தி லிருக்கும் ஒரு ஶ்லோகத்தின் தாத்பர்ய விஷயமாக ஒரு ப்ரஶ்நஞ் செய்யப்பட்டிருக்கிறது. 'க்ருஷ்ணன் இருக்கும் திசையை நோக்கவேண்டாம்; அவன் திருடன்; அங்கே போனுல் உங்களுடைய மநஸ்ஸை அபஹரித்துக் கொண்டுவிடுவேன்' என்று சொல்வதன் தாத்பர்யம் என்ன? அப்படிச் சொல்வது நம்முடைய இஷ்டவிருத்தமன்ருே? என்பதுதான். இம்மாதிரியாகப் பேசுவதன் கருத்து வ்யக்தமே. எவ்விதமான விரோதமும் இல்லை. ஸ்த்ரீத்வ ப்ரயுக்தமாக அநவாப்தி தலையெடுத்துச் சொல்வதை யதாஶ்ருதமாக எடுத்துக்கொள்ளலாமா? "மதுப கிதவபந்தோ மாஸ்ப்ருஶாங்க்ரிம்" - "அடா வண்டே! நீ துஷ்டனுடைய தூதன்; என்னை ப்ரார்த்திக்காதே" என்றும், "விஸ்ருஜ ஶிரஸி

வாதம்............கிம் நு ஸந்தேயஸ்ஸிநு" - "என்னுடைய ஶிரஸ்ஸை ஏன் சுற்றுகிருய்? உன்னுடைய ப்ரபுவுடன் எங்களுக்கு ஸந்தி வேண்டாம்" என்றும், "உபமந்த்ரிநு ஹண்யதாந்யவாதநா" "ஹே தூத! க்ருஷ்ணன் ப்ரஸ்தாவம் வேண்டாம்; வேறு ஏதாவது வார்த்தை இருந்தால் அதைச் சொல்லு, நாங்கள் கேட்கிருேம்" என்றும் அநவாப்தி தலையெடுத்துக் கோபஸ்த்ரீகள் கதறினதை ஸ்ரீ நீலமேகம் ஸ்வாமி கேட்ட தில்லையோ?

ஏதோ இரண்டு எதிர்மறை இருப்பதாகவும், ஆகையால் 'போகாதேயுங் கோள்' என்பது அர்த்தமன்று என்று சொல்வதாகவும் ஒரு யோஜனை எழுதப்பட்டிருக்கிறது. அதன் உபபத்தி இஞ்சித்தேனும் ஏற்படவில்லை. இரண்டு எதிர்மறை இருக்குமிடத்தை நாம் கண்டிலோம்.

மயிலாப்பூர் 18-3-12. ஓர் பௌராணிகன்.

---

## (3)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருத ஶ்லோக விஷயமாக ஸ்ரீ நீலமேகம்ஸ்வாமி செய்திருக்கும் ப்ரஶ்நத்திற்கு அடியேனுக்கு ஒரு ஸமாதாநம் தோன்றுகிறது. லோகத்தில் மநுஷ்யர்களின் ஸ்வபாவம், எது செய்யக்கூடாதது என்று நிஷேதிக்கப்பட்டிருக்கிறதோ அதைச் செய்வதிலேயே உத்ஸாஹமுள்ளதாக இருக்கிறது. இந்த ஸ்வபாவத்தை விஶேஷமாகப் பாலர்களிடம் வ்யக்தமாகக் காணலாம். பால்யம் மாறியும் இந்த ஸ்வபாவம் கொஞ்சம் மறைகிறதே தவிர அற்றுப்போகிறதில்லை. 'இது நிஷித்தமான கார்யம்; இதை நாம் செய்யக்கூடாது' என்று நிருபித்து நம்மை நாம் தடுத்துக்கொள்ளுகிருேமே தவிர நமது ப்ரவ்ருத்தி முதலில் அதைச் செய்வதிலேயே நோக்குகின்றது. 'இதைப் படிக்கக் கூடாது' என்று ஒரு ப்ரகடந பத்திரிகையை எழுதி அதைத் தெருச் சுவரில் ஒட்டினுல் எல்லாரும் அதைப் படிப்பதுபோலவே, 'அங்கு க்ருஷ்ணன் இருக்கிருன்; அவ்விடம் போகக்கூடாது; போனுல் உங்களுடைய மநஸ்ஸை அபஹரித்துக்கொள்வன்' என்று சொன்னுல், எல்லாரும் அவ்விடம் செல்வார்; சென்று உஜ்ஜீவநத்தை அடைவார் என்று எண்ணி லோகாநுபவமுள்ள ஸ்ரீ கர்ணாம்ருதக்காரர் இப்படி எழுதியிருக்கலாம்.

யுக்தி.

ஸ்ரீ:

# பிரிவுகளின் அறிக்கை.

## மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.

சென்ற பிப்ரவரி௴ 18-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 4-மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் மதிராஸ் சைதாப்பேட்டைப் பிரிவின் ஸங்கம் ஒன்று சேர்ந்தது. அநேகம் ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். ஸ்ரீ. சேட்லூர் நரஸிஹ்மாசார்யர் ஸ்வாமி திருப்பாவையைப்பற்றி ஏற்கெனவே உபக்ரமித்துச் செய்ததன் தொடர்ச்சியாக இரண்டாவது உபந்யாஸம் செய்தார். அதன் ஸங்க்ரஹம்:—

முதற் பாட்டில் விதிக்கப்பட்ட ப்ரபத்திக்குப் பலத்தைச் சொல்ல ஆரம்பித்து, அதில் ப்ரபந்நனுக்கு இங்கிருக்குங்காலத்தில் ப்ரபத்திக்கு அடுத்த க்ஷணம் தொடங்கி மேல் நடத்தப்படும் நித்ய நைமித்திக கர்மங்களெல்லாம் கைங்கர்யத்தில் அடங்கியனவாதலால், அவைகளை முதலில் அருளிச்செய்கிறாள். இது, உபநிஷத்திலிருக்கும் "ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ, ப்ரஹ்மணா விபஶ்சிதா" என்கிற வாக்யத்திற்கு ஒத்திருக்கிறது. அது உபாஸகனைப்பற்றிச் சொன்னதாகையாலும், அவனுக்குக் காலாந்தரத்திலும் தேஶாந்தரத்திலும் பலமாகையாலும், அங்கு அப்படிச் சொல்லியிருக்கிறது. லோகாந்தரங்களிலும் க்ராமாந்தரங்களிலுமாகாதே திருவாய்ப்பாடியிற் பிறப்பது, அதிலும் ஆணாகவும் பாலகளாகவும் வ்ருத்தைகளாகவு மிராமல் யௌவந பருவமுள்ளவர்களா யிருப்பதாகிற தங்கள் பாக்யத்தைக் கொண்டாடுகிறார்கள். ஸ்வாபதேஶத்திலோ - தங்கள் தலையிலே கர்த்தவ்ய பாரத்தை ஏறிட்டுக்கொள்ளாமல் பகவானுடைய தலையில் சுமையை வைத்து வாழும் சோம்பராய், "ஸுஹ்ருதா ஸர்வ ஸம்ஹ்ருஹ்" என்று பாக்யாதிஶயத்தை ஶ்லாகிக்கிறபடி. அவனாலே பேறென்றிருக்கின்ற நாமும் இனிப் பலத்துக்குக் கர்த்தவ்ய மொன்றுமில்லாது "ஸூர்யவதஸ" என்கிறபடியே நித்யஸூரிகளைப்போல ஸ்வயம் ப்ரயோ

ஜந கைங்கர்ய பரராகி, நம்மால் ஆரம்பிக்கப்பட்ட மார்கழி நீராட்டமாகிற நோன்புக்குச் செய்யக்கடவ கார்யங்களை நாம் செய்த ப்ரபத்திக்குப் பலமாகக் கொள்வோம். “ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவதேவஸ்ய ஶார்ங்கிண:- மநீஷீ வைதிகாசாரம் மநஸாபி ந லங்கயேத்” என்கிற படியே நமக்குஶேஷியான ‘பாவை’ என்று சொல்லப்படும் பெரியபிராட்டி திருவுள்ளமும் உகக்கும். பயிர்த்தலையில் குடிசை கட்டிக் காத்துக் கிடக்கும் கர்ஷகனைப்போல ஜநங்களின் ஆர்த்தநாதஞ் செவிப்படுவதற்காக க்ஷீராப்தியில் ம்ருதுவாக நித்ரைசெய்துகொண்டிருக்கும் பகவானுடைய வாய்ப்பையும், அதிலுண்டாகும் அவனுடைய ஸர்வாதிஶாயி ஸௌந்தர்யத்தையும் அநுபவிப்பதால் உண்டாகும் ப்ரீதி உள்ளடங்காமல் கானமாக வழிந்து புறப்படப் பாடித்திரிவோம். நெய் முதலிய ப்ராக்ருத வஸ்துக்களைப் புஜியோம்; வ்ரதத்திற்காக அதிகாலையில் நீராடி நாமாக நம்மை அலங்கரித்துக் கொள்ளமாட்டோம்; “ஸர்வைஶ்ச தேவைர் ஹரிவல்லபா ஶுபா” என்கிறபடி அவன் தானே வந்து தன்னுடைய போக்த்ருத்வத்துக்காக அநுபவிப்பித்தால் அது செய்வோம். கர்மயோகம் ஜ்ஞாநயோகம் முதலிய உபாயங்களில் ப்ரவ்ருத்தியோம் என்று ஸ்வாபதேஶார்த்தம். அவன் தானே பரபக்தி முதலியவைகளை க்ருபைசெய்யுமாகில் அதுவும் பெறுவோம். செய்யத்தகாதவைகளைச் செய்வது, செய்யவேண்டியவைகளை விட்டுவிடுவது இவைகளைச் செய்யமாட்டோம். பாகவதர்களிடத்தில் அபசாரமான வார்த்தைகளைச் சொல்லமாட்டோம். அதிதிகளுக்கும் ஆசார்யன் முதலிய உபகாரகர்களுக்கும் ஶக்திக்குத்தக்கபடி உபகரித்து, உபாதாநாதிகளால் ஶாஸ்த்ரீயமாகக் கிடைத்த பொருளைப் பகவதாராதநத்தில் உபயோகப்படுத்தி நாங்கள் உஜ்ஜீவிக்கும் ப்ரகாரத்தை எண்ணி ப்ரீதி பூர்வகமாக எல்லாவற்றையுஞ் செய்வோம். இப்படி விலக்ஷணமான ஜ்ஞாநத்தை எங்களுக்கு ‘சுஸம்ஹிதா’ என்று அநுக்ரஹித்தது எங்களுடைய ஸ்வாமிநியான பிராட்டியே என்று அவளை ஸம்போதித்துச் சொல்லுகிறார்கள்.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஓர் புதிய மதம்.**

"[illegible]". சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ. டி. ராஜகோபாலாசாரியர், புதிதான ஓர் மதத்தின் சில ப்ரக்ரியைகளை எடுத்து உபபாதநம் செய்திருப்பதை எல்லாரும் பார்த்திருக்கலாம். அந்த மதம் சில பாஶ்சாத்ய வித்வாங்களால் ஏற்படுத்தப்பட்டு அங்கிருக்கும் அநேகம் ப்ரமுகர்களால் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. நமது தேஶத்திலும் சில ஆதுநிக வித்வாங்கள் இதை ஸாது என்று க்ரஹித்து இதைப் பரவச்செய்வதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடிவருவதாக அறிகிறோம். இப்படி பஹு ஜநங்களுடைய மநஸ்ஸை ஆவர்ஜநம் செய்யக்கூடியதான இந்த மதத்தின் குண தோஷங்களை நாம் விசாரிக்க வேண்டியது அவஶ்யமே. இந்த அபிப்ராயத்தைக்கொண்டே ஸ்ரீ. ராஜகோபாலாசாரியர் அதன் ப்ரக்ரியைகளை விஶதமாக எடுத்து விவரித்திருக்கிறார்.

இந்த ப்ரக்ரியைகளில் அநேகம் நம்முடைய ஸித்தாந்தத்திற்கு ஸம்மதமாகவே இருக்கின்றன. ஈஶ்வரன் ஒருவன் என்றும்; அவன் ஸர்வஶக்தன், தேஶத்தாலும் காலத்தாலும் வஸ்துவினுலும் அபரிச்சிந்நன், ஸர்வாந்தர்யாமியாக இருப்பதால் ஸர்வ ஶப்த

வாச்யன், ஸர்வ ஜகத் காரணன் என்றும்; ஈஸ்வர விலக்ஷண மாக ஆத்மா என்னும் ஒரு சித்வஸ்து உண்டு, அது ஶரீரத்தைக் காட்டிலும் பிந்நம், ப்ரதி ஶரீரமும் பிந்நம், அதற்கு ஜ்ஞாந ஸங் கோச விகாஸங்கள் உண்டு என்றும்; ஈஸ்வரனிடத்தில் பக்தியே இந்த மதத்துக்குத் தலைக்கட்டும் விஶேஷமென்றும் இதன் ப்ரக்ரி யைகள் சொல்லுகின்றன. ஆனால், கர்ம பந்தமென்பது ஒன்று உண்டு, அப்ரத்யக்ஷமான ஸ்வர்க்கம் முதலிய வஸ்து உண்டு, தர்ம ஸம்ஸ்தாபநத்திற்காக ஈஸ்வரன் அவதரிக்கிறான், தன் ஸங்கல்பத் தால் அவனுக்கு விக்ரஹ வைஶிஷ்ட்யம் முதலியவை ஏற்படுகின்றன; இத்யாதிகளை இந்த மதம் ஒப்புக்கொள்ளவில்லை. இப்படி சில விஷயங்களை ஒப்புக்கொள்வதற்கும் மற்றவைகளை ஒப்புக்கொள் ளாததற்கும் காரணம், இவைகள் யுக்திக்கு விருத்தங்களாகவும், அவைகள் யுக்திக்கு ஒத்தவைகளாகவும் தோன்றுகின்றன வென் பதே. அதாவது - இந்த மத ப்ரவர்த்தகர்கள் யுக்த்யேகஶரணர் களாகப் புகுந்திருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. இவ்விதமாகக் கேவலம் யுக்த்யதீநமாக இருக்கும் மதம் ஸாதுவாகுமா? என்பதை மாத்திரம் நாம் இப்பொழுது ஆலோசிப்போம்.

யுக்தி என்பது, புருஷ புத்தியைக் காரணமாக உடையது. அந்த புத்தி, ப்ரமம் முதலியவைகளுக்கு உட்பட்டது என்பது அநுபவ ஸித்தம். நம்முடைய புத்தி வ்யாபாரத்தால் எதை ஸரி யான ஜ்ஞாநமென்று ஒரு ஸமயத்தில் தெரிந்து கொள்ளுகிறோ மோ, அதுவே மற்றொரு ஸமயத்தில் பிசகானதாகத் தோன்றுவ தை நாம் எவ்வளவோ தடவை பார்த்திருக்கிறோம். மேலும், இந்தப் புத்தியின் கௌஶலத்தில் வ்யக்திகள்தோறும் ஏராளமான தாரதம்யங்கள் இருக்கின்றன. உத்க்ருஷ்டதமமான புத்தியை உடையவன் இவன்தான் என்று ஒருவனைக் குறித்து நாம் நிர்ண யிப்பதும் துஸ்ஸாத்யம். இவையெல்லாவற்றையும் அறிந்திருக்

கும் பாஶ்சாத்யர்கள் இவ்வளவு தோஷ துஷ்டமான புத்தியை மூலமாகக்கொண்டு நிற்கும் யுக்தியை மாத்ரம் அவலம்பித்து எப்படி ஒரு ஸித்தாந்தத்தை ஏற்படுத்தத் துணிகிறார்கள் என்பது ஆஶ்சர்யகரமாக இருக்கிறது.

தவிரவும், பதார்த்தங்களில் இந்த்ரிய கோசரங்களென்றும், இந்த்ரியங்களுக்கு எட்டாதவையென்றும் இரண்டு வகை உண்டு. இந்த்ரியகோசரங்களான பொருள்களின் விஷயத்தில் இந்த்ரிய ஸம்பந்தத்தால் உண்டாகும் ஜ்ஞானத்தை நாம் அவலம்பிப்பது ந்யாய்யமே. இந்த்ரியாகோசரங்களான பொருள்களின் விஷயத்தில் இந்த்ரிய ஜந்ய ஜ்ஞானத்தை நாம் எதிர்பார்ப்பது அஸங்கதமன்றோ? ஆத்ம வஸ்துவும் தைவமென்னும் பொருளும் நமது இந்த்ரியங்களுக்குப் புலப்பட்டவைகளன்றே! அவைகளின் ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தாலும் அநுமானத்தாலும் ஸாதிக்க யத்தநிப்பது ந்யாய விருத்தமேயாகும். "ஆஜ்ஞா தவாக்ருதிமதீ விஹிதா த்ரயீ ஸா தாம் ஹி ப்ரமாணயதி வைதிகஸார்வ-பௌமீம் ஸ்வவிஷயே । ப்ரத்யக்ஷமுக்யமிதராண்யபராணி தோ-ஷைர் ப்ரமாதிபி: ஸஹிதா ஹிதா வசாம்ஸி" [அதீந்த்ரியமான வஸ்து விஷயங்களில் பகவானுடையே தம்முடைய கட்டளையாக ஏற்படுத்தப்பட்ட வேதமன்றோ ப்ரமாணம்? பெரியோர்கள் அப்படியே அங்கீகரித்திருக்கிறார்கள். மற்ற ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களெல்லாம், பௌருஷேயத்வ ப்ரயுக்தமான ப்ரமம் முதலிய தோஷங்களுடன் கூடியிருக்கிறபடியால், நம்பத்தகுந்தவைகளல்ல. ஶ்ருதி ஒன்றே நமக்கு விஶ்வாஸ பாத்ரம்] என்று அதீந்த்ரிய வஸ்து விஷயத்தில் ஶ்ருதி ப்ராமாண்யத்தையே ஸ்ரீ ஆழ்வான் பலவாறாகக் கொண்டாடியிருக்கிறார்.

பாதராயண ப்ரப்ருதிகளும், கேவல தர்க்கத்தைக் கைப்பற்றி ஈஶ்வர விஷயகமான ஸித்தாந்தம் செய்பவர்களை அங்கீகரிக்க

வில்லை. "तर्काप्रतिष्ठानादपि", "अन्यथाऽनुमेयमिति चेदेवमप्यनिर्मोक्षप्रसङ्गः" [2 - 1 - 11 - 12] என்கிற ஸூத்ரங்களில் இதைக் காணலாம். ஸ்ரீ பாஷ்யகாரரும் "पुरुषबुद्धिमूलतर्कावलम्बनस्य तस्यैव देशकालाकारान्तरेषु [illegible] तर्कदूष्यत्वसंभावनया तर्काप्रतिष्ठानदोषान्निर्मोक्षो दुर्लभः; अतोऽतीन्द्रियेऽर्थे शास्त्रमेव प्रमाणम्" என்று தர்க்கத்தின் அப்ரதிஷ்டையையும், அதீந்த்ரியமான அர்த்தத்தில் ஶாஸ்த்ரமே ப்ரமாணமென்பதையும் நன்ருக த்ருடீகரணம் செய்திருக்கிருர். ஆகையால், ஈஶ்வரனைப் பற்றிய விஷயத்தில் வேதத்தை ஒப்புக்கொண்டு, அந்த வேதத்தின் உபப்ருஹ்மணத்திற்காக மாத்திரம் தர்க்கத்தை அவலம்பித்து, அது வழியாக ஆத்மோஜ்ஜீவந மார்க்கத்தை நாம் தேடுவதே ந்யாயத்திற்கு ஒத்திருக்கும். "आर्षं धर्मोपदेशं च वेदशास्त्राविरोधिना । यस्तर्केणानुसंधत्ते स धर्मं वेद नेतरः" என்று மநுஸ்ம்ருதி சொல்லுகிறது.

ஏதோ சில அம்ஶங்களில் நமது ஶாஸ்த்ரத்தில் ஆபாததஃ பூர்வோத்தர விரோதங்கள் ஆபாஸிக்கின்றன வென்றும், அந்த ஶாஸ்த்ரங்களிற் சொல்லியிருக்கும் சில விஷயங்கள் அநிஷ்டங்களாகவும் யுக்திக்குப் பொருந்தாதவைகளாகவும் இருக்கின்றன வென்றும் இத்யாதி காரணங்களைக் கொண்டுமாத்திரம் நாம் ஶாஸ்த்ரத்தை விலக்கிவிட்டு, இந்தப் புதிய மதம் போன்ற மதங்களைக் கைக்கொள்வது நம்முடைய ஹிதத்தின் பொருட்டு ஆகாது.

---

**ஸ்ரீ அழகிய சிங்கர் திருமேனி.**

சென்ற பத்துப் பதினைந்து திநங்களாக ஸ்ரீ அழகியசிங்கர் திருமேனி பாங்கில்லாமல் எழுந்தருளியிருக்கிறதாகக் கேள்விப்பட்டு அவரது திருவடியை ஆஶ்ரயித்த ஶிஷ்யர்களில் அநேகர் துக்காக்ராந்

தர்களாக இருக்கிறார்கள். ஸ்ரீ ஸ்வாமி, திருமேனி ஸ்வாஸ்த்யத்தை அடைந்து, ஸந்நிதியை அடுத்து வந்துசேரும் ஶிஷ்யவர்க்கத்தாரெல்லாருக்கும் ஆத்மோஜ்ஜீவந மார்க்கத்தைத் தேடக்கூடிய கௌஶலத்தைப் பெற்று, இன்னும் அநேகவர்ஷங்கள் எழுந்தருளியிருக்கும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் கடாக்ஷிக்கவேணுமென்பது எல்லாருடைய ப்ரார்த்தநையாக இருக்கையிலும், ஸ்வாமியின் வார்த்தகத்தையும் அஶக்தியையும் பார்க்கும் பொழுது அப்படிப்பட்ட நிஷ்பத்தி நேர்வதற்கு பலமான ஹேதுக்கள் இருக்கிறதாகத் தோன்றவில்லை. இது, அத்யந்தம் ஶோசிக்க வேண்டிய விஷயமே. ஆனால், அப்ரதீகார்யமாகவும் தைவாயத்தமாகவுமிருக்கும் விஷயத்தில் நாம் ஶோசிப்பதும் வீண். பகவத் ஸங்கல்பம் விபரீதமாக இருந்து விட்டால் நாம் என்ன செய்யலாம்? இந்த மாதிரி காலங்களில் நாம் ஆஶாஸிக்கவேண்டிய விஷயமொன்று உண்டு; அதை மாத்திரம் ப்ரார்த்திப்போம். அந்திமகால ப்ரயுக்தமான கரணங்களுடைய அபாடவத்தால் தமக்குப் பிறகு ஆஸ்தாநத்துக்கு எழுந்தருள வேண்டிய ஸ்வாமியை நியமிப்பதில் கொஞ்சம் தவறுதல் நேர்வது ஸஹஜம். ஆஸ்தாநாநர்ஹர்களான அநேகம் பேர், ஸ்ரீ ஸ்வாமியின் அஶக்தியையும் தங்களுக்கு நேர்ந்திருக்கும் ஸாந்நிஹித்யத்தையும் அவலம்பித்துத் தங்களுக்கே நியமநமாகும்படி நிர்ப்பந்திக்கலாம். அம்மாதிரியான நிர்ப்பந்தங்கள் ஒன்றும் நேராமலும், வேறு எவ்விதமான தவறுதலுக்கும் இடமில்லாமலும், தகுந்த யோக்யதையுடன் கூடிய ஒரு ஸ்வாமியை ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளச்செய்யும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் கடாக்ஷிக்கவேணும் என்பது தான் நாம் ப்ரார்த்திக்கவேண்டிய விஷயம். ஶமய தயாளோ வரத க்ஷமாநிதே விஶேஷதோ விஶ்வஜநீந விஶ்வ-ஹிதஜ்ஞ ஸர்வஜ்ஞ ஸத்ருஶக்திக ப்ரஸஹ்ய வா ஸாதய யாவ நாதிஶாம்.

---

## புஸ்தகவரவு.

சென்னைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. தி. வெங்கடராம ஐயங்காரால் பிரசுரமானது.

க. ஸாரார்த்ததிலகம். (ஸ்ரீவேங்கடநாதாசாரியர் சரித்திரஸாரம்.)

உ. திருமுடியடைவு (எம்பெருமானுர் முதல் நயினாராசாரியருளிட்ட பரம்பரை.)

இவ்விரண்டும் தீர்த்தப்பிள்ளை அருளிச்செய்தன.

௩. தேசிகர்நூற்றந்தாதி. (100 வெண்பா கந்தாடை திருமழிசைமன்னப்பங்கார் அருளிச்செய்தது.)

ச. வாழிதிருநாமம். (ஆழ்வார் ஆசாரியர்களின்வாழி) ஸ்ரீப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயர்அருளிச்செய்தது.

இவை நான்கு மடங்கிய சிறு புஸ்தகம் 74 - பக்கங்கொண்டது விலை அணு 4; தபாற்கூலி வேறு.

சென்னை நுங்கம்பாக்கம் (36 நெ. வீடு) அக்கிரகாரத்தில் வஸிக்கும் மேற்கூறிய பண்டிதரிடம் கிடைக்கும்.

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு- ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. | ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) ... ... | 0 | 2 | 0 |
| 3. | ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |

வேண்டுமவர்கள் சென்னை மயிலாப்பூர் ஸ்ரீகேஶவப் பெருமாள் ஸந்நிதிவீதி 11 - நெ. க்ருஹத்தில் இருக்கும் ஸ்ரீவேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## பகவத்கீதை தமிழ் மொழிபெயர்ப்பு.

### இதில் அடங்கியவை.

ராமாநுஜபாஷ்யம், தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகை, ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகம், தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை, தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு.

### இதுவரையிலும் மொழிபெயர்க்கப்படாதவை.

1, 2, 3 ஸஞ்சிகை வெளியாகிவிட்டது.

| | |
|---|---|
| ராயல் 8 பாரமுள்ள ஸஞ்சிகை | 0 6 0 |
| தபால்கூலி வி. பி. சார்ஜ் உள்பட | 0 8 0 |
| வருஷ சந்தா (12 - ஸஞ்சிகை). | 4 0 0 |
| தபால்கூலி உள்பட | 4 12 0 |

**சிந்தாத்ரிபேட்டை ஸத் ஸம்ப்ரதாய வர்த்தநீ,**

34 - அக்ரஹாரம்வீதி சிந்தாத்ரிபேட்டை, சென்னை.

---

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

(ஸாதாரண ஞு மாசிமீ ஏற்படுத்தப்பட்டது.)

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசாரியர் பி.ஏ, எல்.டி.

☞ கட்டணம்கட்டுதலும், இன்னும் பத்ரிகை விஷயமாக எழுதுதலும் எல்லாம் மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதிவீதியி லிருக்கும் பத்ரிகை மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

**வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 2.**

Printed for the General Secretary, A. M. S. Sabha,
by W. Pushparatha Chetty & Co., K. R. Press, Madras.